இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,730 — JULY 30, 1915.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[By-laws made by the Local Board of Minuwangoda relating to manufacturing Aerated Waters.]

*சோடா லெமினற்றும் அதைப்போன்ற மற்ற குடிவகைகளும் செய்யும் இடங்களைப் பற்றிய துணைப்பிரமாணங்கள்.*

மினுவான்கொடை லோக்கல் போட்டின் எல்லைக்குள் சங்கத்தலைவருக்கு ஒரு மாதத்துக்குமுன் எழுத்துமூலமாக அறிவியாமல் யாதா ஒருவரும் விற்பனவுக்காக சோடா லெமெனற்றும் அதைப்போன்ற மற்ற குடிவகைகளும் செய்யத் துவங்கப்படாது.

2. ஏதேன் காலையிலிருந்து, அல்லது குதிரை மாலிலிருந்து, அல்லது மிருகங்களை ராவில் அல்லது பகலில் விடும் வேறு கட்டிடத்திலிருந்து, அல்லது ஏதேன் கக்கூசிலிருந்து அல்லது கக்கூசக்குளியிலிருந்து 150 அடிக்குள் சோடா லெமனற்றும் அதைப்போன்ற மற்ற குடிவகைகளும் செய்யுமிடம் இருக்கப்படாது. மேற்சொல்லிய குடிவகைகள் செய்யுமிடத்தின் ஒரு பகுதியாகுதல் ஆட்கள் சீவிக்கிறதற்கு பாவிக்கப்படாது.

3. சோடா லெமனற்றும் அதைப்போன்ற மற்ற குடிவகைகளும் செய்யுமிடங்களும் அவைகளை சுற்றியிருக்கும் இடங்களும் நன்றாய் வெளிச்சம்வரக்கூடியதாயும் நல்லாய் காற்றுவரக்கூடியதாயும் சீமேந்து நிலமுள்ளதாயும், அழுக்குகளை கழுவித்தள்ளக்கூடிய சாந்தால் கட்டுப்பட்ட கான்களுமுள்ளதானதுமாயு மிருக்க வேண்டும். அழுக்கு தூசியில்லாமலும் துப்பரவாயும் அவ்விடங்களை வைத்திருக்க வேண்டும். இனிப்புச்சாறுகள் இலையான் போகக்கூடாத பிறம்பான அறைக்குள் செய்ய வேண்டும். மேற்சொல்லிய குடிவகைகள் செய்கிறதற்கு பாவிக்கும் மருந்துச் சாமான்களும் மற்றும் சாமான்களும் நல்ல சாமான்களாயிருக்க வேண்டும். மேற்சொல்லிய குடிவகைகள் செய்கிறதற்கு பாவிக்கப்படும் பாத்திரங்களும் யந்திரங்களும் மெத்த நல்ல துப்பரவாய் வைத்திருக்க வேண்டும்.

4. சங்கத்தலைவரின் அனுமதிபெற்றதுமாகிய அழுக்குப்படாது சரிவர பாதுகாக்கப்பட்ட இடத்திலிருந்து மேற்சொல்லிய குடிவகைகள் செய்கிறதற்கு பாவிக்கப்படும் தண்ணீர் எடுக்கப்படவேண்டும். அவ்விடத்திலிருந்து வேலைத்தலத்துக்கு கொண்டுபோகும் வழியில் தண்ணீர் அழுக்குப்படாத மாதிரியாயிருக்க வேண்டும். மேற்சொல்லிய குடிவகைகள் செய்கிறதற்குப் பாவிக்கப்படும் யந்திரங்களோடு சேர்த்து நல்லாய் கட்டியிருக்கிற வக்குகளில் தண்ணீர் விடப்பட்டிருக்க வேண்டும்.

5. சோடா லெமனற்றும் அதைப்போன்ற மற்ற குடிவகைகளும் செய்கிறதற்கு பாவிக்கப்படும் முழுத் தண்ணீரும் பூவேலுடைய வடிக்குள்ளால் அல்லது சங்கத்தலைவரால் ஏற்கப்பட்ட வேறு வடிக்குள்ளால் வடித்தெடுக்க வேண்டும். மேற்சொல்லிய வடி சூத்திரங்களோடு சேர்த்திருக்க வேண்டும். சங்கத்தால் ஏற்கப்பட்ட பிரசித்தமான இடத்திலிருந்து தண்ணீர் எடுக்கப்படும் காலத்தில் மேற்சொல்லிய கட்டளைச்சட்டத்தை சங்கத்தலைவரால் விலக்கக்கூடும்.

6. சங்கத்தின் எல்லைக்குள் செய்யப்பட்ட அல்லது வெளியிலிருந்து கொண்டுவரப்பட்ட சோடா லெமனற்றையும் அதைப்போன்ற மற்ற குடிவகைகளையும் மனுஷர் குடிக்கிறதற்கு தகுதியற்றதென்று சங்கத்தின் சக்கிடுத்தாரால் அல்லது இன்ஸ்பெக்றரால் நல்லாய் அறியப்பட்டால், அவர் அந்தக் குடிவகையை எடுத்து கேள்த் ஆபிஷருக்கு அல்லது பொலிசு நீதிவானுக்கு கொடுப்பார். அப்படி கொடுக்கப்பட்ட குடிவகையை மனுஷர் குடிக்கிறதற்கு தகுதியற்றதென்று கேள்த் ஆபிஷருக்கு அல்லது பொலிசு நீதவானுக்கு தோற்றினால், அதை அழிக்கும்படி அவர் கட்டளைசெய்வார். மனுஷர் குடிக்கிறதற்கு தகுதியற்றதென்று கோட்டுக்கு நல்லாய் தெரியும்படி அத்தாட்சிப்படுத்தப்பட்ட சொடா லெமனற்றையும் அதைப்போன்ற மற்ற குடிவகைகளையும் செய்கிறவர் குற்றச்சாட்டுக்கு ஏதுவாயிருப்பார்.

7. சோடா லெமனற்றும் அதைப்போன்ற மற்ற குடிவகைகளும் செய்கிறதற்கு பாவிக்கப்படும் எல்லா போத்தில்களும் வடிகட்டி எடுக்கப்பட்ட தண்ணீரினால் கழுவப்பட்டும் மெத்த துப்பரவாயும் வைத்திருக்கவேண்டும்.

8. சோடா லெமனற்றும் அதைப்போன்ற மற்ற குடிவகைகளு மிருக்கிற ஒவ்வொரு போத்திலினும் என்ன குடிவகையென்றும், செய்த இடமென்னவென்றும், செய்கிற தலத்தின் ஆளுடைய அல்லது சார்பினுடைய பெயரென்னவென்றும், செய்கிற யந்திர சாலைக்கு சங்கத்தலைவரால் கொடுக்கப்பட்ட நொம்பர் என்னவென்றும் தெரிவிக்ககூடியதாய் ஒரு லேபல் ஒட்டியிருக்க வேண்டும்.

9. பன்னிரண்டு வயதுக்குட்பட்ட அல்லது கரப்பன் விசாதியுள்ள அல்லது தொத்து விசாதியுள்ள ஆட்கள் ஒருவரையும் சோடா லெமனற்றும் அதைப்போன்ற மற்றக் குடிவகைகளையும் செய்கிற சாலையில் வேலைக்கு எடுக்கப்படாது.

10. சோடா லெமனற்றும் அதைப்போன்ற மற்றும் குடிவகைகளும் போற்றிலில் அடைக்கும்பொழுது எல்லா ஆட்களும் முகத்துக்கு இரும்பு வலையும் கைகளுக்கு தோல் கைமேசம் போட்டுக்கொண்டு நிற்கவேண்டும்.

[Rules framed under Irrigation Ordinance, Manmunai South, Batticaloa District.]

நீர்ப்பாய்ச்சல் கட்டளைச்சட்டங்கள்.

கீழ்மாகாண மட்டுக்களப்பு மண்முனைப்பற்றுத் தென் பகுதியிலிருக்கும் அரசாட்சி ஏசன்றரின் ஆணைக்குள்ளும், பராபரிப்புக்குள்ளும் அடங்கிய கிராமக் குளங்கள் அல்லது சிறிய நீர்ப்பாய்ச்சல் வேலைகளின் கீழடங்கிய மானாவாரி நிலங்களினதும், வேளாண்மைக் காணிகளினதும் சொந்தக்காரராலும், வேளாண்மைச் செய்கைக்காரராலும் அனுசரிக்கப்படவேண்டிய 1906 ம் ஆண்டின் 16 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டத்தின்கீழ் உண்டாக்கப்பட்ட பிரமாணங்கள் :

1. இவ்வேலைகள் கீழ்மாகாண அரசாட்சி ஏசன்றரின் பொறுப்பி லிருக்கின்றன. "பிரதான தலைமைக்காரன்" "நீர்ப்பாய்ச்சல் மேற்பார்வைக்காரன்" என்று சொல்லப்படுஞ் சொற்கள் அரசாட்சி ஏசன்றரால் இப்பிரமாணங்களை நடப்பிக்கிறதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தரைக் குறிக்கும்.

2. 1906 ம் ஆண்டின் நீர்ப்பாய்ச்சல் கட்டளைச்சட்டத்தின் 14 ம் பிரிவில் ஏற்பாடுபண்ணப்பட்டபடி தெரிவுசெய்யப்படும் வட்டை விதானைமார் அவர்கள் பொறுப்பின்கீழ் தங்கள் தங்கள் பகுதிகளுக்குரிய நீர்ப்பால்ச்சல் நெற்செய்கைக் கருமங்கள் எல்லாவற்றையும் பிரதான தலைமைக்காரன் நீர்ப்பாய்ச்சல் மேற்பார்வைக்காரன் கட்டளைப்படியும் அவர் அதிகாரத்துககு கீழும் முற்றாய் மேற்பார்வையிடுவார்கள். வட்டைவிதானைமார் இப்பிரமாணங்களெல்லாவற்றையுஞ் செலுத்தி அவைகளின் தவறுகளை விசாரித்துத் தீர்ப்புச்செய்யும்படி கிராமச்சங்கத்தின் முன் கொண்டுவரல்வேண்டும். வட்டை விதானைமாருக்கு உதவி அவசியமானால் அவர்களால் வைக்கப்படும் வட்டை காவலர்களால் உதவிசெய்யப்படலாம். வட்டை விதானைமாரும் வட்டை காவலர்களும் ஏதுங் கடமையில் தவறினதாய்க் கிராமச்சங்கத்தின் முன் போதிய அத்தாட்சி காட்டப்பட்டால் அவர்கள் ஓர் பிரமாணத்தை மீறினால் எவ்விதமாகத் தண்டிக்கப்படுவார்களோ அவ்வித தண்டனைக் காளாயிருப்பார்கள்.

3. வட்டை விதானைமார் விளைவின் பங்காகச் செய்கைக்காரரிடமிருந்து ஒரு அவண விரைப்புத்தரைக்கு ஒரு மரக்கால் நெல்வீதம் பெற்றுக்கொள்ள உரித்துள்ளவராவர். வட்டை காவலனும் நியமிக்கப்பட்டிருந்தால் அவனுந் தன் விளைவின் பங்காக ஒரு அவண விரைப்புத் தரைக்கு ஒரு மரக்கால் வீதம் பெற்றுக்கொள்ள உரித்துள்ளவனாவான். ஒரு வட்டை காவலனுக்கு மேற்பட நியமிக்கப்பட்டிருந்தால், வட்டைகாவலனின் பங்கு அவர்களுக்கிடையில் சரிபங்காய்ப் பிரிக்கப்படும். நெல்லைக் களத்திலிருந்து எடுத்துக்கொண்டு போகுமுன் வட்டை விதானைமார் வட்டை காவலர்களுடைய பங்குகள் களத்திலேயே அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். இவர்கள் தமது கடமைகளைச் சரிவர நிறைவேற்றவில்லையென்று அரசாட்சி ஏசன்றர் எண்ணினால் இப்பங்குகள் முழுதையுமாவது அல்லது அதிலேதுமொரு பாகத்தையாவது கொடாதபடி தடுத்துவைக்கலாம். தேவையென்று கண்டால் தடுக்கப்பட்ட அப்பங்கை வட்டைவிதானை அல்லது வட்டைகாவலனுக்காக வேலைபார்த்தவருக்குக் கொடுக்க அல்லது நீர்ப்பாய்ச்சல் தெண்டப்பணக் கணக்கில் வைக்கப்படப் பண்ணலாம். அவ்வாறு தடுக்கப்பட்ட வட்டை விதானையின் அல்லது வட்டைகாவலனின் பங்கை அல்லது அப்பங்கின் ஓர் பாகத்தைப் பெறும்படி அரசாட்சி ஏசன்றர் ஓர் ஆள் நியமிக்கலாம். அப்படிப்பட்ட நியமனம் எழுத்தி லிருக்கவேண்டியது. நியமிக்கப்பட்ட ஆளின் சம்பளத்துக்காக அரசாட்சி ஏசன்றர் இவ்வாறு தடுக்கப்பட்ட பங்கின் ஓர் பாகத்தைப் பிரயோகிக்கலாம். இப்பிரமாணத்தின் நோக்கத்துக்கிசைய ஒரு அவணம் இரண்டு ஏக்கருக்கு சமமெனக் கவனிக்கப்படவேண்டியது.

4. வேளாண்மைக்காலஞ் சமீபிக்கும்போது அது முன்மாரிகால வேளாண்மை, பின்மாரி, அல்லது மறுபோகங்களாயிருந்தாலும் அக்காணிக்காரரின் கூட்டமொன்று கூடப்படவேண்டும். இக் கூட்டத்தில் அரசாட்சி ஏசன்றராவது அல்லது அவரால் இந்த நோக்கத்துக்காக எழுத்து மூலமாய் ஏற்படுத்தப்பட்ட இன்னொருவராவது சபாநாயகராக இருப்பார். மேற்சொல்லியபடி அரசாட்சி ஏசன்றர் அல்லது அவரால் ஏற்படுத்தப்பட்டவரால் கூட்டம் கூடுந் திகதியும் இடமும் நியமிக்கப்படவேண்டும். இதையிட்டுக் குறைந்த கணக்கில் ஏழு நாட்களுக்குமுன் அறிவித்தல் கொடுபடவேண்டும்.

5. முற்கூறிய பிரிவிற் சொல்லியபடி கூடப்பட்ட கூட்டத்தவர்கள் தீர்மானிக்கவேண்டியது என்னவெனில்:—

(a) செய்கை பண்ணப்படவேண்டிய நிலங்கள் எவை.
(b) விரைப்பும், நீர்ப்பாய்ச்சலும், தொடங்கவேண்டியதும், முடியவேண்டியதுமான திகதிகள்.
(c) வேளாண்மைச் செய்கைக்காக டாப்புகள் கொடுக்கப்படவேண்டிய திகதி.
(d) வேலியடைத்து முடிக்கவேண்டிய திகதி.
(e) வட்டைகள் விரைக்கவேண்டிய ஒழுங்கு.
(f) வேளாண்மை செய்யும் விதம்.
(g) ஒவ்வொரு வட்டையிலும் விரைக்கப்படவேண்டிய நெற்சாதி.
(h) வேளாண்மைக்காலத்தில் பசுமாடுகளும், எருமைமாடுகளும் கட்டப்படவேண்டிய இடமும் மாதிரியும்.
(i) வட்டையைச்சுற்றி வேலிகட்டும் விதமும்.

கூட்டத்தின் ஏதொரு தீர்மானத்தையாவது மீறுதல் பிரமாணத்தை மீறினதாகக் கவனிக்கப்படும்.

6. தீர்மானஞ்செய்யப்பட்ட காலத்தில் வேளாண்மைச்செய்கை தொடங்கக்கூடாம லிருந்தால் 5 ம் பிரமாணத்தின்படி கூடப்பட்ட கூட்டம் ஒன்று இன்னும் மேலதிகமாய் எவ்வளவுகாலம் கொடுக்கப்படலாமென்பதை அரசாட்சி ஏசன்றரின் அனுமதிக்கமையத் தீர்மானஞ்செய்வதற்குக் கூடப்படவேண்டும்.

7. ஏதொரு குளத்துக்கடங்கிய காணி முழுதையும் நீர்ப்பாய்ச்சப் போதிய தண்ணீர் இல்லாமலிருக்கச் சம்பவிக்குங் காலத்தில் 5 ம் பிரமாணப்படி ஓர் கூட்டங்கூடி அக்கூட்டத்தில் எவ்வளவு காணியைச் செய்கைபண்ணலாமென்று தீர்மானிக்கலாம். செய்கைபண்ணுவோர் எப்பாகத்தையாகுதல் அல்லது பாகங்களையாகுதல் சொந்தக்காரரோ அல்லவோ என்று கவனியாமல், முன்செய்கைபண்ணப்பட்ட விசாலப்படி அக்குளத்துக்கடங்கிய முழுக்காணியில் ஒவ்வொருவரும் தன் தன் பாகத்தின் வீதம் என்னவோ அவ்வீதத்தின்படி செய்கைபண்ணலாம்.

8. 5 ம் (c) பிரமாணத்தில் நியமிக்கப்பட்ட நாளுக்குப் பிந்தாமல் ஒவ்வொரு காணிக்காரனும் அல்லது முல்லைக்காரனும் தன் வயலில் வேலைசெய்யப்போகிற முல்லைககாரர், வேளாண்மைக்காரர்களுடைய பெயர்களடங்கிய இடாப்பொன்றை வட்டை விதானைக்குக் கொடுக்கவேண்டியது. இவ்விடாப்பு காணிக்காரனாலும், முல்லைக்காரனாலும், செய்கைக்காரராலும் கையொப்பம்வைக்கப்படல் அல்லது இரண்டு சாட்சி முகதாவில் கையடையாளம் வைக்கப்படல்வேண்டும். பிழையான விபரங்களை கொடுப்போர் அல்லது விபரங்களை மறைப்போர் இப்பிரமாணங்களின்படி குற்றத்துக் குள்ளாவார்கள். இந்த இடாப்புக்கொடுத்த திகதி தொடக்கம் முல்லைக்காரரும், செய்கைக்காரரும், காணிக்காரனும் வேளாண்மைச்செய்கைய அடுத்த எல்லா வேலைகளுக்கும் பொறுப்பாளிகளாவதுமல்லாமல், போதிய நியாயமின்றி அசட்டைபண்ணினதாய் அல்லது தவறினதாய்க் காணப்பட்டால், இப்பிரமாணங்களின்படி குற்றத்துக்குள்ளாவார்கள். வேளாண்மைச் செய்கைக்காலத்தில் செய்கைக்காரர் மாறினால், அம்மாறுதலைக்குறித்து சொந்தக்காரன் அல்லது முல்லைக்காரன் வட்டைவிதானைக்கு உடனே எழுத்தில் அறிவித்தல் கொடுத்தல்வேண்டும்.

9. ஒரு காணிக்கு இன்னொருவர் ஆட்சியில் வந்துவிட்டாரென்பதைக் காட்டுவதற்கு நியாயப்பிரமாணப்படியான சாதனங்களில்லாதவிடத்து, அக்காணியின் உரிமையைப்பற்றிய பிசகு இருந்தால் சென்ற வருடச்செய்கையில் டாப்புக் கொடுத்தவர்களிடமிருந்து டாப்பு ஏற்கப்படும். வட்டைவிதானை டாப்பை ஏற்றுக்கொண்டால், சாட்சிகள் பிறநீங்கலாக டாப்பில் கையொப்பமிட்டவர்கள் யாரையும் இப்பிரமாணங்கள் கட்டுப்பாடு செய்யும்.

10. எந்தக் காணிக்காரனாவது தன்னுடைய பங்கைச் செய்கைபண்ண விருப்பமில்லாம லிருப்பதைக்கண்டால், அவ்விருப்பயீனத்தை வட்டைவிதானை பிரதான தலைமைக்காரனுக்கு அறிவித்தல் வேண்டும். பிரதான தலைமைக்காரன் அப்பகுதியை மறு சொந்தக்காரனை அல்லது செய்கைக்காரனைச் செய்கைபண்ண விடலாம்.

ஆனால் அவ்விதஞ்செய்வதற்கு சொந்தக்காரனின் சம்மதி எழுத்தில் கொடுபடவேண்டும். இவ்விதம் மறு சொந்தக்காரன் (அல்லது செய்கைக்காரன்) காணிச் சொந்தக்காரனுக்கு ஏதாவது கொடுக்கக் கட்டுப்பட்டவனல்ல. ஆனால் அம்முறைச் செய்கைக்கு இப்பிரமாணங்களால் கட்டுப்பாடுபண்ணப்பட்ட காரியங்களெல்லாவற்றிற்கும் அவனுக்குக் கொடுக்கப்பட்ட காணிக்கு அவனே சொந்தக்காரனைப்போலப் பாத்திரவாளியாவான். ஆனால் காணியின் சொந்தக்காரனுக்கு மறு சொந்தக்காரனால் (அல்லது செய்கைக்காரனால்) தனது காணி செய்கைபண்ணப்படுகிறது விருப்பமில்லாவிட்டால், அவனே இப்பிரமாணங்களால் கட்டுப்பாடுபண்ணப்பட்ட கருமங்களெல்லாவற்றிற்கும் பாத்திரவாளியாவான்.

11. எக்காணிக்காரனாகுதல் (அல்லது செய்கைக்காரனாகுதல்) 5 ம் பிரமாணத்துக் கடக்கமான கூட்டத்தின் தீர்மானப்படி நீக்கப்பட்டு அப்போக வேளாண்மைச்செய்கைக்கு இப்பிரமாணங்களால் செய்யவேணுமெனக் கட்டுப்பாடு பண்ணப்பட்டவைகளிலிருந்து நீங்கிக்கொள்ளக்கூடாது. சொந்தக்காரனாவது (அல்லது செய்கைக்காரனாவது) ஏதும் வேலைசெய்ய வேண்டியவனாயிருந்தும், அதைச் செய்யத் தவறினால், வட்டைவிதானை பிரதான தலைமைக்காரன் மூலமாய் எழுத்தில் அரசாட்சி ஏசன்றருக்கு அவ்வேலைசெய்வதற்கு மதிப்பிடப்பட்ட செலவை அறிவிக்கவேண்டியதுமன்றி, அப்படித்தவறின் சொந்தக்காரனுக்கு (அல்லது செய்கைக்காரனுக்கு) விரோதமாய் அப்பிரமாணத்தை மீறினதாக வழக்கு வைக்கலாம். அரசாட்சி ஏசன்றர் அப்பொழுது விசேஷ தேவையெனக் கண்டால், தேவையான பணத்தை நீர்ப்பாய்ச்சல் தெண்டப்பணக் கணக்கிலிருந்து மூற்பணமாகக் கொடுப்பார். ஆனால் வட்டைவிதானை இவ்வேலையை எவ்விதமும் உடனே முடித்துவிடப் பிரதான தலைமைக்காரன் அவ்வேலையிற் சென்ற செலவைச் சரியென அத்தாட்சிப்படுத்த அப்பணம் 1906 ம் ஆண்டின் 16 ம் இலக்க நீர்ப்பாய்ச்சல் கட்டளைச்சட்டத்தின் IX. ம் அதிகாரத்தில் விதித்த பிரகாரம் அறவிடப்படும்.

12. சொந்தக்காரரும் (செய்கைக்காரரும்) தங்கள் வட்டைக்குள் அல்லது கண்டத்துக்குள் பறவைகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் உறைவிடமாயிருந்து வேளாண்மைக்கு நட்டத்தை வருவிக்கக்கூடிய மரங்களையும் காடுகளையும் அகற்றிப்போடவேண்டும்.

13. ஒவ்வொரு வட்டைக்கும் தண்ணீர் விடப்படவேண்டிய காலம் வட்டை விதானையால் நியமிக்கப்படுவதுமன்றி, பிரதான தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் மேற்பார்வைக்காரனுடைய அதிகாரத்துக்கமைய வட்டை விதானை தண்ணீர் பிரிவிட்டுக்கொடுப்பதை நடத்தலாம். தன்னுடைய வட்டைக்குள் தண்ணீர் பாய்ச்சவேண்டிய காலத்தில் தண்ணீர் ஓடுவதைத் தடுக்கக்கூடிய கட்டுகளை வெட்டுவிக்கவும் அவ்வட்டைக்குள் போகுந் தண்ணீர் வேறு வாய்க்கால்வழியாய் ஓடக்கூடியதாயிருந்தால், அவைகளை மறிக்கவுங் கூடும். இப்படியான காலங்களிலன்றி வேறு நேரங்களில் தனது வட்டைக்குச் சேராத கட்டுகளில் அல்லது வாய்க்கால்களில் அவர் கையிடப்படாது.

14. குளத்திலிருந்தாவது அல்லது வேறெவ்விடத்தி லிருந்தாவது தண்ணீர் பிரித்துக்கொடுத்தல் வட்டைவிதானையின் பொறுப்பிலேயே செய்யப்படவேண்டியது. வட்டைவிதானையின் கட்டளை அல்லது சம்மதமின்றி யாதொருவரும் தண்ணீர் கொடுக்கவாகுதல் பங்கிடவாகுதல் தடைபண்ணவாகுதல் வேறுவழியாய்த் திருப்பவாகுதல் அல்லது வேறெவ்விதமாகுதல் பிரயோகிக்கவாகுதல் கூடாது.

15. ஒரு கண்டத்திலிருக்கும் வயல்களுக்கு எவ்விடத்திலிருந்தாகுதல் தண்ணீர் பிரித்துக் கொடுக்கும்பொழுது திடலிலுள்ள வயல்களுக்கு முதல் தண்ணீர் கொடுத்துப் பிற்பாடு பள்ளக்காணிகளுக்குக் கொடுக்கப்படல்வேண்டும். தண்ணீர் பிரித்துக்கொடுப்பதில் மறு காணிக்காரருக்கு நட்டம் வரத்தக்கதாக யாராகுதல் எவ்விதத்திலாவது தலையிடக் கூடாது.

16. யாராகுதல் தன்னுடைய காணிக்குக் கீழிருக்கும் பூமிக்குப் பாயும் தண்ணீரை வேணுமென்று தடைபண்ணினால் அல்லது மேடானவைகளிலிருந்து வரும் மிச்சத்தண்ணீரைத் தடைப்படுத்தினால் அல்லது தண்ணீர் பங்கிட்டுக் கொடுப்பதில் எவ்விதமேனும் தலையிட்டால், வட்டைவிதானை சாட்சிகளுடன் அவ்விடத்துக்குப்போய் தான்தானே அப்படியான வக்கடைகளைத் திறந்து அல்லது தடைகளை நீக்கிவிடவேண்டும். வட்டைவிதானையுடைய கட்டளையின்றி எவராகுதல் தண்ணீர் கொடுக்கவும் பங்கிட்டுக் கொடுக்கவும் தடைபண்ணவும் வேறுவழியாய்த் தண்ணீரைத் திருப்பிவிடவும் அல்லது வேறெவ்விதமாகுதல் பாவிக்கவுங்கூடாது.

17. காணிக்காரரும் சோந்தையுள்ள மற்றவர்களும் தங்கள் வயல்களில் உண்டாகுந் தண்ணீர்ச் சேதத்துக்குப் பொறுப்பாளிகளாய் நட்டமிறுக்கவேண்டிவரும். நீர்ப்பாய்ச்சல் வாய்க்காலில் அல்லது வேறு வாய்க்கால்களிலாவது நெல்லு விதைக்கக்கூடாது.

18. குளங்களின்கீழ் காணிகளுள்ள காணிக்காரரே யல்லாமல், வேறொருவரும் பயிர்ச்செய்கை நோக்கமாகக் குளத்திலிருந்து தண்ணீரெடுத்துப் பாவிக்க உரித்துள்ளவர்களாகமாட்டார்கள்.

19. விதைப்பு முடிந்து மூன்று நாட்களுக்குள் முழுவட்டையைச் சுற்றி அடைக்கப்படவேண்டிய வேலியை வட்டைவிதானை அளந்து சொந்தக்காரன் ஏற்படுத்தும் செய்கைக்காரர் ஒவ்வொருவருக்கும் அவனுடைய வயல் வேலிக்கடுத்திருந்தாலும் இல்லாதிருந்தாலுஞ்சரி, அவர்கள் காணியின் விசாலப்படி பங்கிட்டுக்கொடுக்க வேண்டும். இன்னும் மேலதிகமான புதுக்கம்புகள் தேவையாயிருந்தால், வட்டைவிதானை அதைப் பிரதான தலைமைக்காரனுக்கு அறிவிக்க வேண்டும். அவர் கம்புகள் வெட்ட உத்தரவுபெற்று அவனுக்குக் கொடுப்பார்.

20. 5 ம் பிரிவுக்கடக்கமான கூட்டத்தில் நியமிக்கப்பட்ட காலத்துக்குள் செய்கைக்காரர்கள் வேலியை முடித்து ஒவ்வொரு செய்கைக்காரனும் தான் கூட்டின பங்கு வேலியின் மத்திக்கருகாண்மையாய் ஓர் காவற் பறணும் கட்ட வேண்டும். செய்கைக்காரர் வேலியையும் காவற் பறண்களையும் நல்ல நிலபரத்தில் வைத்து வட்டைவிதானையின் சட்டளைப்படி ஒழுங்கான காவல்காக்கவேண்டும். திறமையற்றவர்களையும் பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களையும் காவல்காக்க வைக்கக்கூடாது.

21. குளக்கட்டின் எப்பகுதியின் மேலாவது வேலிபோடக் கூடாது.

22. இராத்திரியில் வட்டைவிதானை அல்லது வட்டைக்காவலன் வட்டை வளைக்கும்போது முல்லைக்காரன் வெளிச்சத்துடன் அவர்களுடன் கூடப்போகவேண்டும். வட்டைவிதானை தேவையில்லையென்று எண்ணும் காலம் வரைக்கும் இவ்விதம் நடபெற வேண்டும்.

23. என்ன காரணத்திலிருந்தாகுதல் கண்டத்தில் ஏதும் ஒரு பகுதி மற்றப் பகுதி வேளாண்மைக்குமுன் விளைந்தால், செய்கைக்காரர் அப்பகுதி வேளாண்மை முழுவதும் வெட்டப்பட்டுச் சூடாக்கப்படும்வரையில் வட்டையைக் காவல் பார்த்து வேலியையும் பவுத்திரப்படுத்த வேண்டும். 5 ம் பிரமாணத்தின் தீர்மானப்படி விதைத்த வேளாண்மை வெட்டியதின்பின் காலம்பிந்தி விதைத்ததினால், அல்லது கூட்டத்தில் தீர்மானித்த நெல்லைத்தவிர வேறுவிதமான நெல் விதைத்ததினால் கண்டத்தில் எப்பகுதியாவது விளையாமலிருந்தால், மற்றப்பகுதியின் செய்கைக்காரர் கண்டத்தின் பகுதி விளையும் வரைக்கும் வேலியைப் பவுத்திரப்படுத்த அல்லது காவல்காக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கமாட்டார்கள்.

24. வேளாண்மை வெட்டி முடிந்தபின் வட்டைவிதானை வேலியைப் பிடுங்கும்படி கட்டளைபண்ணி வேலிக்கம்புகளைத் தான் கட்டளையிடுமிடத்தில் குவித்துவைக்கும்படி செய்கைக்காரருக்கு கட்டளைபண்ண வேண்டும். காணிக்காரர்கள் வட்டைவிதானையுடைய சம்மதத்துடன் வயல்களிலிருந்து வேலிக்கம்புகளை அப்புறப்படுத்தலாம். ஆனால் அவர்கள் அப்படி அப்புறப்படுத்தும் வேலிக்கம்புகளின் தொகைக்கு வட்டைவிதானைக்குப் பற்றிச்சீட்டுக் கொடுத்து மறுபோகச் செய்கைக்கு வேளாண்மை செய்தாலுஞ் செய்யாவிட்டாலும் அவைகளைக் காணிக்குள் திருப்பிக்கொண்டுவர வேண்டும், அல்லாவிட்டால் அவைகளின் மதிப்பு விலைக்குப் பாத்திரவாளியாயிருப்பார்கள்.

25. ஒவ்வொரு வயலின் சொந்தக்காரருஞ் சேர்ந்து சூட்டுக்களத்தைத் துப்பரவுபண்ணிப் பெலனுள்ள வேலியுங் கட்டவேண்டும். அங்கேதான் சூடுகள் வைக்கப்பட்டு செய்கைக்காரர் சூடுபோடப்படும்மட்டும்; தங்கள் முறைப்படி வேளாண்மை வெட்டி முடிந்த திகதி தொடக்கம் மூன்று மாசத்துக்கு மேற்படாத காலத்துக்கு சூட்டுக்காவல் காக்க வேண்டும். வட்டைவிதானைக்கு அறிவித்தல் கொடாமல் யாதொரு சூடும் போடப்படக்கூடாது.

26. வேளாண்மை செய்து முடிந்தபின் 3 ம் பிரமாணத்தின்படி தலைமைக்காரருக்குப் போமதியான பங்குகளும் வேளாண்மையிலே வேலைசெய்த மற்றெல்லாருக்கும் போமதியான கூலியையும், மாட்டுகூலியையும் மற்றுஞ் செய்கைக் கடங்கிய கொடுமதிகள் எல்லாம் இறுபடமுன் யாதொரு நெல்லும் வயலால் அப்புறப்படுத்தப்படாது.

27. அரசாட்சி ஏசென்றனர் அவசியமென்று உத்தேசித்தால் காணிக்காரரைக்கொண்டு குளங்களையும், கட்டுகளையும், சிறு வாய்க்கால்களையும், நீர்க்கால்களையும், மற்றுஞ் சிறு வேலைகளையும் புதுப்பிக்கலாம், அல்லது பழுதுபார்ப்பிக்கலாம். ஒவ்வொரு சொந்தக்காரனும் செய்யவேண்டிய வேலை மேற்குறிக்கப்பட்ட குளம் முதலியவற்றால் நயம்பெறும் பூமிகளின் விசாலத்தின் வீதப்படியிருக்கும்.

28. காணிக்குள் அல்லது வெளியே புது வாய்க்கால், கட்டு, அல்லது வேறு வேலைகள் தேவையென்று கண்டால், 27 ம் பிரமாணத்தில் சொல்லியபடி நயம்பெறும் காணிக்காரரால் தங்கள் பங்குவீதப்படி கட்டப்படவேண்டும். வாய்க்கால் திறக்கப்படவேண்டிய இடம் பிரதான தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் மேற்பார்வைகாரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் இன்ஸ்பெக்றர் கட்டளைப்படி நியமிக்கப்பட்டு கட்டைகளடிக்கப்படும். அப்படிப்பட்ட வாய்க்கால்களினால் கட்டுகளினால் அல்லது மறு வேலைகளினால் தங்களுக்கு நயமில்லாவிட்டாலும் எல்லாச் சொந்தக்காரரும் அவைகள் போகும் வழிக்கு இடம் கொடுக்கவேண்டும். ஆனால் அவ்வேலைகளினால் நேரே நயப்படும் காணிகளின் சொந்தக்காரர்கள் அவ்வேலைகளை செய்ததினால் நட்டமடைந்த காணிகளின் சொந்தக்காரர்களுக்கு இப்பிரமாணத்தின்படி எடுக்கப்பட்ட காணிகளுக்கு அல்லது அடைந்த நட்டத்திற்குச் சரியான பதிலைத் தாங்கள் நயமடைந்த நிலத்தின் விசால வீதப்படி இறுககவும் பாத்திரவாளியாவார்கள். கொடுக்கப்படவேண்டிய நட்டப்பணத்தை அரசாட்சி ஏசென்றர் அல்லது உதவி அரசாட்சி ஏசென்றர் தீர்மானிப்பர்.

29. யாதொரு புதுக்குளம், கட்டுவாய்க்கால், அல்லது வேறு வேலை சோந்தையுள்ள காணிக்காரர் கூடிய ஓர் கூட்டத்தில் ஆவசியகமென்று தீர்மானிக்கப்பட்டு அவர்களுடைய தீர்மானம் அரசாட்சி ஏசென்றரவர்களால் அங்கீகாரம் பெற்றாலன்றி உண்டாக்கப்படக்கூடாது.

30. வயல்களுக்குள்ளிருக்கும் நீர்க்கால்களும் வாய்க்கால்களும் அவைகள் ஊடறுத்துச் செல்லும் காணிகளின் செய்கைக்காரரால் அல்லது சொந்தக்காரரால் சரியான நிலைபரத்தில் வைக்கப்படவேண்டும்.

31. வேளாண்மைச் செய்கைக்குத் தேவையாய் நேரிடு மெல்லாச் சாதாரணமான பழுதுபார்த்தல் அதாவது வாய்க்கால்கள் துப்புரவுபண்ணுதல் குளக்கட்டுகள் புதுப்பித்தல் செய்கைக்காரரால் செய்யப்படவேண்டும்.

32. எல்லாக் குளங்களுடைய கட்டுகளும் அக்குளங்களுக்குக் கீழுள்ள காணிகளின் சொந்தக்காரருக்குள்ளே சரிபங்காய்ப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு காணிக்காரனும் அவனவனுக்கு விடப்பட்ட பாகத்தை எப்பொழுதும் காடு, பாவற்காடு, மற்றும் வளரும் ஒவ்வொரு விதமான பற்றைகளும் இல்லாமலும், கறையான் புற்றுகளில்லாமலும் வைக்கவும் அப்பாகங்களைச் சரிவர புற்கத்தை யடித்துவைக்கவும் வேண்டும்.

33. 34 ம் பிரமாணத்தில் சொல்லியபடி ஆவசியகமாய்ச் செய்யவேண்டிய காரியங்களைத் தவிர்ந்த 27 ம் 28 ம் பிரமாணங்களுக்குக் கீழ் ஒவ்வொரு நெற்காணிச் சொந்தக்காரனும் செய்வதற்கு உத்தரவாதமான முழுப்பங்கு வேலை அவ்வேலையினால் நயமடையக் கூடியதாயிருக்கும். ஒவ்வொரு ஏக்கர்க் காணிக்கும் வருஷாந்தம் இரண்டு கனவடிவம் மண் வேலை அல்லது ஐந்து நாள் வேலை அல்லது அவைகளுக்குச் சமமான ஏக்கருக்கு இரண்டு ரூபாய் வீதமான முற்பணத்துக்கு மேற்படக்கூடாது. முழுத்தொகை வேலையையும் எந்த வருஷத்திலாவது சொந்தககாரரிடமிருந்து பெற்றுக கொள்ள அவசியமெனக் காணப்படாவிட்டால் அவர்களால் எவ்வளவு வேலை செய்யப்படவேண்டுமென்று அரசாட்சி ஏசென்றரவர்கள் தீர்மானிப்பார்.

34. மேலே சொல்லியபடி வழக்கமான வருஷாந்த வேலையுடன் எப்பொழுதாவது அரசாட்சி ஏசென்றர் அல்லது வேலையை மேற்பார்வைபார்க்கும்படி அவரால் அதிகாரம்பெற்றவர் ஓர் அவசியமான பழுதுபார்ப்பு வேலை அல்லது நட்டம் நேரிடுவதைத் தடுக்கும் வேலையைச் செய்துமுடிப்பதற்குக் கூலியாட்கள் தேவையென்பதாகக் கண்டால், ஒவ்வொரு காணிக்காரனும் தானாவது அல்லது பதிலாளாவது வேலைசெய்ய ஒழுங்குபண்ணி அவ்வேலை முடிவுபெறும் வரைக்கும் நாளாந்தம் வேலை நடைபெறும்படி செய்விக்கவேண்டியது. எவ்வருஷத்திலாவது 33 ம் பிரமாணத்திற் சொல்லிய வழக்கமான வேலையின் இரட்டிப் பங்குக்கு மேற்பட்ட வேலையைச் செய்விக்கக்கூடாது.

35. 33 ம் பிரமாணத்திற் சொல்லிய வேலையைச்செய்ய எண்ணியிருப்பதையிட்டு தேவையாயிருக்கும் வேலையின் அளவையிட்டும் வட்டைவிதானை குறையாமல் இருபத்தொரு நாட்களுக்குமுன் பறைசாற்றிப் பிரசித்தம்செய்யவிக்க வேண்டும். அப்படிப்பட்ட அறிவித்தல்களின் காப்பிகள் வட்டவிதானையால் அரசாட்சி ஏசென்றருக்கு அல்லது வேலையை மேற்ப்பார்வை பார்க்கும்படி அவராற் தத்துவம்பெற்றவருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

36. எவராவது ஓர் காணிக்காரன் (அல்லது செய்கைக்காரன்) இப்பிரமாணங்களுக்கமையச் செய்யப்படவேண்டிய வேலையைச் செய்யத் தவறினால், அரசாட்சி ஏசென்றர் அவ்வேலையைச் செய்வதற்கு மதிப்பிடப்பட்ட தொகையை நீர்ப்பாய்ச்சல் தெண்டப்பணத்திலிருந்து வட்டைவிதானைக்கு முற்பணமாய்க் கொடுத்து, வட்டைவிதானையை அவ்வேலையைச் செய்யும்படி கட்டளைபண்ணவும் அவ்வேலையின் செலவையும் செய்யத்தவறினவரின் மேல் கிராமச்சங்கத்தினால் விதிக்கப்பட்ட அபராத மேதுமுண்டானால் அதையும் 1906 ம் ஆண்டின் பதினாறு மிலக்க (16) நீர்ப்பாய்ச்சல் கட்டளைச் சட்டத்தின் ஒன்பதாம் (9) அதிகாரத்திற் சொல்லிய பிரகாரம் அறவிடவேண்டும்.

37. ஒரு கண்டத்தி லிரண்டு வயல்களுக்கு இடையிலிருக்கும் வரம்பை அல்லது எல்கையை ஒருவரும் எவ்வகையாய் ஆவது மாற்ற அல்லது பழுதுபடுத்தக்கூடாது. அப்படியான மாற்றுதல் அல்லது பழுதுபண்ணுதல் நடந்ததாக அறிவித்தல் கிடைத்தவுடன் அவ்வட்டைவிதானை சொந்தக்காரருக்கு அறிவித்து சாட்சிகளுடன் அவ்விடத்திற்குச் சென்று அவ்வெல்கையை முன்னிருந்த நிலையில் திரும்ப வைக்கும்படி சொந்தக்காரரைக் கேட்கவேண்டும். அறிவித்தல் கொடுத்து மூன்று நாட்களுக்குள் அவர்க ளப்படிச் செய்யத்தவறினால் வட்டைவிதானை அதையிட்டு பிரதான தலைமைக்காரனுக்கு அறிவிக்கவேண்டும். அவர் பிசகைத் தீர்ப்பதற்கு ஓர் கிராமச்சங்கத்தைக் கூட்டுவார்.

38. எந்தக் காணிக்காரனும் கேட்கப்படும்பொழுது தனது காணிகளின் சரியான எல்கைகளைக் காட்டவேண்டும். பிரதான தலைமைக்காரனால் அல்லது நீர்ப்பாய்ச்சல் மேற்பார்வைக்காரனால் கேட்கப்பட்டால் அவ்வெல்கைகளைக் குறிக்கக்கூடிய கட்டுகளை அல்லது வேறு ஏற்றவேலைகளை உண்டாக்கவேண்டும்.

39. நீர்ப்பாய்ச்சல் இன்ஸ்பெக்றர் அல்லது அதன்பொருட்டு அவரால் சரியானபடி தத்துவம்பெற்ற ஒருவரைத் தவிர வேறொருவரும் ஏதாவது கிராமக் குளத்தினளவான தண்ணீர் மட்டத்துடன் அல்லது சுலுஸ்கதவுடன் எவ்வகையாவது கையாட அல்லது அவைகளை மாற்றக்கூடாது.

40. வேளாண்மைச் செய்கைகாலத்தில் வட்டைவிதானை அவனுடைய வட்டையில் அல்லது குளக்கட்டின்மேல் அல்லது ஓர் நீர்ப்பாய்ச்சல் வாய்க்கால் ஓரத்தில், அல்லது அருகாண்மையாய்த் திரிந்து வேளாண்மையைச் சேதம்பண்ணக்கூடியதாய்க் காணப்படும் எல்லா ஆடுமாடுகளையும் பிடிக்கிறதற்குத் தத்துவமுண்டு. இப்பிரமாணத்துக் கடக்கமாய்ப் பிடிக்கப்பட்ட ஆடுமாடுகள் கிராமக்கோட்டுக்கு முன்பாய்க் கொண்டுபோவதற்குத் தாமதமின்றி அவ்விடத்துப் பொலிஸ் தலைமைக்காரனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும்.

41. வட்டைவிதானைகளும் வட்டைகாவலர்களும் தங்களுடைய பகுதிகள் அல்லது கண்டங்களிலிருந்து மூன்று மைல் தூரத்துக்குள் குடியிருக்க வேண்டும். வேளாண்மைச் செய்கைகாலத்தில் அல்லது தங்கள் ஊழியம் தேவையாயிருக்கும் மற்றும் நேரங்களில் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தான் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் மேற்பார்வைக்காரனுக்குத் திருத்திகரமானதெனக் காணப்படும் ஒழுங்குகள் செய்யாமல் தாங்களவ்விடத்தில் இல்லாமற்போகக்கூடாது.

42. குளநில மதன்கீளுள்ள காணிக்காரரி லதிகப்பற்ருேனோர் அரசாட்சி ஏசன்றவர்களின் உத்தரவோடு செய்கை பண்ணப்படலாமெனத் தீர்மானித்தால் செய்கைபண்ணப்படலாம். பெரும்பகுதியோர் குளப்பூமியைச் செய்கைபண்ணத் தீர்மானித்து அரசாட்சி ஏசன்றரின் உத்தரவையும் பெற்றுக்கொண்டாலன்றி, யாதொரு காணிக்காரனும் குள நிலத்தை யல்லது அதனொப்பாகத்தையாகுதல் செய்கைபண்ணக்கூடாது.

43. செய்கைபண்ணப்படும் வட்டைகளுக் கிடையிலிருக்கும் வளிகள் பழைய வழக்கத்தினால் ஏற்பாடுபண்ணப்பட்டபடி செய்கைக்காரரால் அவரவருடைய பங்கு விகிதப்படி வெளியாக்கிவைக்கப்பட வேண்டும்.

44. இதன்பின்னர் அரசாட்சியாரிடமிருந்து அல்லது மறு ஆட்களிடமிருந்து கொள்ளப்படும் எல்லா வேளாண்மைக் காணிகளின் சொந்தக்காரருஞ் செய்கைக்காரரும் இப்பிரமாணங்களைக் கைக்கொள்ளவேண்டியவர்களாய் வருவார்கள். அப்படிப்பட்ட சொந்தக்காரரும் செய்கைக்காரரும் செய்கைக்குள்ளிருக்கும் காணிகளின் சொந்தக்காரனனுபவிக்கும் சலாக்கியங்களையும் உரித்துகளையும் எல்லா வகையினும் மனுபவிக்கலாம்.

45. வேளாண்மைச் செய்கையை அல்லது நீர்ப்பாய்ச்சலையிட்டு ஏதொரு காரியத்தில் காணிக்காரருடைய ஆலோசனையை அல்லது உதவியைப் பெற்றுக்கொள்ளுகிறதற்கு அரசாட்சி ஏசன்றர், உதவி அரசாட்சி ஏசன்றர், அல்லது காணிக்காரரில் பெரும்பகுதியானோர் தேவையென எண்ணும்பொழுது காணிக்காரருடைய ஓர் கூட்டம் பிரதான தலைமைக்காரனால் கூட்டப்படலாம்.

46. வேளாண்மைச் செய்கையைப்பற்றியதால் இப்பிரமாணங்களிலே வெளியரங்கமாய் ஏற்பாடுபண்ணப்படாததாயும் இவைகளுக்கு மாறுயில்லாததுமான தற்காலத்திலிருக்கும் ஏதாவது வழக்கம் இப்பிரமாணங்களின் வலிமையையுடையதாகவும் அவைகளின் பாகமாகவும் கவனிக்கப்படும்.

47. இப்பிரமாணங்கள் காலத்துக்குக்காலம் நியமிக்கப்படும் அரசாட்சி ஏசன்றர் கிராமச்சங்கங்களி னக்கிராசனர்கள் பிரதான தலைமைக்காரர், நீர்ப்பாய்ச்சல் சுப்பிறிந்தன்மார், இன்ஸ்பெக்றர்மார், வட்டைவிதானைமாராலும், வட்டைகாவலர்களாலும் செலுத்தப்படுவது மல்லாமல், இப்பிரமாணங்களை மீறுகை 1906 ம் ஆண்டின் 16 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தினால் விதிக்கப்பட்டபடி தண்டிக்கப்படக் கூடியதாயிருக்கும்.

48. இப்பிரமாணங்களுக்கு முன் உண்டாக்கப்பட்ட பிரமாணங்க ளெல்லாம் இத்தாலழிக்கப்படுகின்றன.

---

[Registration of Dogs, Galle Municipality.]

மகா பிரித்தானியாவும் ஐயர்லந்துஞ்சேர்ந்த ஐக்கிய ராச்சியத்துக்கும் கடல்களுக்கப்பாலுள்ள ஆதிபத்திய நாடுகளுக்கும் அரசரும் சமயபரிபாலருமாகிய மகத்துவ நாயகர் ஐந்தாவது ஜோர்சு அவர்கள் நாமத்தினாலே :

கௌரவம் பொருந்திய பாத் வரிசையின் நயிற் கம்மான்டர் என்னும் பட்டவர்த்தனரும் இலங்கை
தீவுக்கும் அதனைச்சார்ந்துள்ள நாடுகளுக்கும் தேசாதிபதியும் சேனாதிபதியுமாகிய
உத்தமனார் சேர் றபேட் சாமேர்ஸ் அவர்களால் செய்யப்படும்

## விளம்பரம்.

றபேட் சாமேர்ஸ்,

1901 ம் வருசத்தின் 8 வது கட்டளைச்சட்டம் 4 ம் பிரிவின் ஏற்பாட்டின்படி செய்யப்பட்டு, 1903 ம் வருசம் தைமாதம் 23 ந் திகதியைக்கொண்ட 5,901 மிலக்க அரசாட்சியாரின் "கசட்" பத்திரிகையில் பிரசித்தப்படுத்தியிருக்கும் 1903 ம் வருசம் தைமாதம் 21 ந் திகதியில் விளம்பரஞ்செய்த சட்டத்தின் 12 மிலக்க வகுப்பில் நாய்களை பதிவு பண்ணுவதற்காகிய் சில பைலோ சட்டம் பொதிந்து இருப்பதினாலும் ;

1901 ம் வருசத்தின் 8 வது கட்டளைச்சட்டப்படி திருத்தப்பட்ட 1887 ம் வருசத்தின் 7 மிலக்க நகரசங்க சட்டப்படி 124 (1) ம் பிரிவின்படி செய்யப்பட்டு, 1909 ம் வருசம் பங்குனிமாதம் 26 ந் திகதி விளம்பரஞ்செய்த 6,302 மிலக்க அரசாட்சியாரின் "கசட்" பத்திரிகையில் பிரசித்தப்படுத்திய சில உப பைலோ சட்டத்தை 1909 ம் வருசம் பங்குனிமாதம் 20 திகதியைப் பொதிந்து ஏற்படுத்தியிருப்பதினாலும் ;

1910 ம் வருசத்தின் நகராதிகாரச் சங்கச் சட்டத்தின் 109 (1) ம் பிரிவின் ஏற்பாடுகளின்படி, காலி நகராதிகாரச் சங்கத்தாரால் மேற்சொல்லிய பைலோ சட்டங்களில் நாய்களை பதிவுபண்ணுவதுக்காகியவைகளை நீக்கப்பட்டிருப்பதை ;

மேற்படி தேசாதிபதியாகிய நாம் 1910 ம் வருசத்தின் நகராதிகார சட்டத்தின் 109 (3) ம் பிரிவினால் நம்மீது வைக்கப்பட்ட தத்துவத்தைச்செலுத்தி நாய்களை பதிவுபண்ணுவதுக்காகிய பைலோ சட்டத்தை இத்தால் நீக்கப்படுவதை பெலப்படுத்துகிறோம் என்று நீவீர் அறிந்துகொள்வீராக.

எங்கள் ஆண்டவரின் வருடம் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டு ஆடிமாசம் பதினாலாந் திகதியாகிய இன்று இலங்கைத்தீவில் கொழும்பில் வைத்து கொடுக்கப்பட்டது.

உத்தமனார் அவர்களின் கட்டளையின்படி,

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,
இராசாங்க லிகிதர்.

கடவுள் ராசாவை காப்பாற்றுக.

[Registration of Dogs, Galle Municipality.]

பிரசித்தம்.

நாய் பதிவுபண்ணுவதற்காகிய 1901 ம் ஆண்டின் கட்டளைச்சட்டம்.

இதனடியிற் சொல்லப்படும் துணைச்சட்டம் பைலோ கட்டளைச்சட்டம் ஆகுறது மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தில் 5 மிலக்க வகுப்புக்கமைய நகரசங்கத்தலைவரால் பிரசித்தப்படுவதை பொது ஜனங்கள் அறிந்துகொள்வீராக.

உத்தமஞர் அவர்களின் கட்டளைப்படி,

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,
இராசாங்க விகிதர்.

கொழும்பு இராசாங்க விகிதர் கந்தோர்,
1915 ம் ஆ ஜுலை 14 ந் தேதி.

இடாப்பு.

காலி நகரசங்கம்.

1901 ம் வருஷத்து 25 மிலக்க கட்டளைச்சட்டத்தின் 5 மிலக்கப்பிரிவின் பைலோ கட்டளைச்சட்டம்.

நாய்பதிவுபண்ணுதல்.

1. பதிவுபண்ணுதல்.—நகரசங்க எல்கைக்குள் வைத்திருக்கும் எல்லா நாய்களும் நகரசங்க கந்தோரில் நாய்கள் பதிவுபண்ணுவதற்காக வைத்திருக்கிற புத்தகத்தில் பதிவுபண்ணிவைக்க வேண்டியது.

2. பதிவுபண்ண நாய்களை கொண்டுவருதல்.—பதிவுபண்ணும்படி சொல்லப்பட்ட எந்த நாய்களையும் வருத்துவது சங்கத்தலைவருக்கு நீதியாயிருக்கிறதும்தவிர, கொண்டுவராதவைகளை பதிவுபண்ணி நிச்சயப்பத்திரம் கொடுப்பதை தவிற்கப்படும்.

3. நிச்சயப்பத்திரம் கொடுப்பதை மறுத்தல்.—பொது ஜனங்களுக்கு அபாயம் வருத்தும் தொற்றுநோயுள்ளதென சுகாதாரதலைவருக்கு காணும் நாய்களின் பதிவின் நிச்சயப்பத்திரம் உடந்தைக்காரருக்கு கொடுப்பதை சங்கத்தலைவரால் மறுக்கப்படும்.

4. பதிவு வரி.—சொல்லிய எல்கைக்குள் வைத்திருக்கும் நாய் ஒவ்வொன்றுக்கும் வருசாந்த பதிவு வரி ரூபாய் 1 சதம் 50 கொடுக்கவேண்டும்.

5. பதிவுபண்ணிய நிச்சயப்பத்திரம்.—1901 ம் ஆண்டின் 25 மிலக்க கட்டளைச்சட்டத்தின் 5 ம் வகுப்பில் சொல்லிய பதிவுநிச்சயபத்திரம் இத்துடன் A அச்சரமிட்டு அணைத்திருக்கிற பிரகாரமாக யிருக்கவேண்டும்.

6. உடந்தைக்காறனுக்கு அறிவித்தல் கொடுத்ததின் பிற்பாடு நாய்களை பதிவுபண்ணிய நிச்சயப்பத்திரத்தை சங்கத்தலைவருக்கு அவளப்பம்பண்ண வலுமையாயிருக்கிறது :—

(a) சுகப்படுத்தக்கூடாத வியாதியாக அல்லது சொடிலாக சுகாதார அல்லது சஙகத்தலைவர் சீவிக்கவிடக்கூடாதென்று கண்ட நாய் ;

(b) உடந்தைக்காறன் நித்தமும் வைத்துக்காப்பாற்றுமலும் பரவசமில்லாதபடி விட்டிருக்கிறதென்று சங்கத்தலைவர் ஒத்துக்கொண்ட நாய் ;

(c) தொற்றுவியாதியாகயிருக்கும்போது பிறருடைய நாயுடன் சேர்ந்திருக்க உடந்தைக்காறன் விட்டிருந்த நாய்

7. நாயை சேதப்படுத்திப்போடுதல்.—நிச்சயப்பத்திரத்தை அவளப்பம்பண்ணியதை நாய் உடையவருக்கு அறிவித்தல் கொடுத்து சங்கத்தலைவரிடம் நாயை கொண்டுவரச்செய்து சங்கத்தலைவரிடம் நாயை கொண்டுவரச்செய்து சங்கத்தலைவர் அதை கொல்லுவது தேள்ளையெனக் கண்டால் கொல்லும்படி கட்டளையிடப்படும்.

8. நாயை கொண்டுவருதல்.—நிச்சயப்பத்திரம் கொடுக்க மறுத்த அல்லது அவளப்பம்பண்ணிய எல்லா நாய் உடையவரும் அறிவித்தல் கொடுத்ததின் பின்னுல் அதில் சொல்லப்பட்ட நாள் வரையில் நகரசங்க நாய் அடைப்புச் சாலையில் அடைக்கும்படி அச்சாலைக்காறனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டியது.

9. உடந்தையின் அறிவித்தல்.—நாயைப் பாவிக்கிற வைத்திருக்கிற அல்லது உரித்தாக்கிக்கொண்டவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வருஷமும் பங்குனிமாதம் 31 ந் திகதியில் அல்லது அதற்கேற்கணமே நகரசங்கத்துக்கு அதைப் பற்றிய அறிவித்தல் கொடுக்கவேண்டியது, அல்லது நாய் வைத்தவனு 21 நாளைக்குள் நாயுடைய பூரண ஒவ்வாமை பிரிவினைகளுடனும் எழுதிக்கொடுக்க வேண்டியது.

10. அனுபோவிப்பவர் நிரப்பிக்கொடுக்கும் இடாப்பு.—எல்லா ஒவ்வொரு வீடுடையவர்களும் எந்த வீட்டில் அல்லது காணியில் எவரெவர்களுக்கு முடையதாயிருக்கும் நாய்களின் தொகை, உற்பத்தி, ஆண் பெண், நிறம் உள்ளமையாக எழுதி ஒவ்வொரு வருஷங்களிலும் பங்குனிமாதம் 31 ந் திகதிக்குமுன் கொடுக்கப்படும் இடாப்பில் பதிவுபண்ணி இடாப்புகிடைத்து ஒரு கிழமைக்குள் திருப்பி கொடுப்பதை நகரசங்கத்தலைவருக்கு நீதியாயிருக்கிறது.

11. நாயை பிடித்துவைத்தல்.—தப்பித் திரியும் நாய்களை 1901 ம் ஆண்டின் 2 ம் கட்டளைச்சட்டத்தின் 10 ம் வகுப்பின் பிரகாரம் நகரசங்கத்தலைவரால் பிடிக்கச்செய்து பொலிஸ் நாய் அடைப்பில் அல்லது சங்கத்தலைவரால் அதற்காக கற்பிக்கப்படுபவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

12. பிடித்த நாயின் பதிவு வரி.—பிடித்து வைத்த தப்பித்திரியும் நாய் ஒன்றுக்கு முதல் நாளைக்கு 50 சதமும் அடுத்த 1 நாளைக்கல்லது ஒரு நாளில் பகுதிக்கு 25 சதம் விதமாகவும் சங்கத்தலைவரின் கட்டளைப்படி நாய் உடையவர்களிடம் அறவிடாமல் கொடுக்கப்படமாட்டாதது மல்லாமல் பதிவு பண்ணிப் படாத்த நாய்களானுல் பதிவுபண்ணும்மலரியும் சேர்த்து அறவிடப்படும்.

13. படியும் பேசும்.—நகரசங்க எல்கைக்குள் உள்ள சகல நாய்களுக்கும் உடந்தைக்காறரால் கொண்டுலாப்பட்ட பட்டியில் மின்சிபல் முத்திரையிட்ட லேக அடையாளம் (பேஜ்) இருக்கவேணும், அதை பதிவுபண்ணுவதெர்க்காக ஒரு பதிவுப் புத்தகம் நகரசங்க ஆபீசில் வைத்திருக்கும்.

14. பெஜகளுக்கு வெகுமதி.—கேட்டவ ரெவருக்கும் பேஜ் ஒண்டுக்கு 25 சதம் பெற்றுக்கொண்டு கொடுக்கும்படி சங்கத்தலைவருக்கு இத்தால் வத்துவப்படுத்தியது. முந்திய வருசத்து பேஜை ஒவ்வொரு வருசத்திலும் பங்குணிமாதம் 31 ந் திகதியில் அல்லது அதெர்க்கேற்கணமே நகரசங்க ஆபீசுக்கு திருப்பிகொடுத்தவர்களுக்கு வெகுமதி யில்லாமல் கொடுக்கிறதுமல்லாமல் முத்திரை யிடுவதுக்கும் சிலவில்லை.

15. பேசுவின் வடிவு.—பொதுவேலை கமிட்டியவர்களால் தீர்ப்பிடும்படி ஒவ்வொரு வருஷத்திலும் பேஜின் வடிவு மாற்றப்படும்.

16. பேசுஸ் திருப்பி கொடுத்தல்.—பேஜ் உடந்தைக்காறன் அதின் கலம் கழியும் நாளாகிய ஒவ்வொரு வருசமும் பங்குனிமாதம் 31 ந் திகதியில் அல்லது அதெர் கோர்கணமே நகரசங்க ஆபீசில் பேஜை திருப்பி கொடுக்க வேண்டியது. அப்படி திருப்பி கொடுக்காத்தவர்கள் குற்றத்துக்குளராவர்.

17. குற்றச்சாட்டு.—மேற்சொல்லிய எந்த பைலோ கட்டளைச்சட்டத்துக்காவது மாற்றம்பண்ணியவர்கள் குற்றவாளியாகிய தீர்மாணிக்கைக்குள்ளாகி 20 ரூபாவுக் கதிகப்படா தெண்டம் விதிக்கப்படும். தெண்டம் கொடுக்காதவரையில் இரண்டு கிழமைக் கதிகப்படாத சிவில் மறியல்படுவார்கள்.

---

5 வது பைலோ சட்டத்தில் சொல்லிய A அட்சர போம்.

இலக்கம் ————.

காலி நகரசங்கம்.

நாய்களை பதிவுபண்ணிய நிச்சயப்பத்திரம்.

பகுதியின் இலக்கம் ————. பதிவுபண்ணிய இலக்கம் ————

———— ரு ஏடியிருக்கும் ———— இன்றையத்தினம் இந்தக் கர்தோரில் இதனடியில் குறிக்கப்பட்ட பிரிவினைகளையுடைய ———— நாயை பதிவுபண்ணி அதின் வரி ரூபா ஒன்றும் சதம் ஐம்பதும் (ரு. 1·50) செலுத்தப்பட்டிருக்கிறதென்பதையும் இதினால் நிச்சயப்படுத்தப்பட்டது.

முத்திரையின் இலக்கம் ————.

---

நாயின் விவரம்.

உற்பத்தி ————.

ஆண், பெண் ————.

நிறம் ————.

இந்த நிச்சயப்பத்திரம் 191 — ம் வருஷம் பங்குனிமீ 31 ந் திகதி வரையில் வழங்கப்படும்.

சரூப்.

பிரின்சிப்பல் ஆபீஸ்,
காலி, 191 — ம் ஆண்டு ———— மீ —— ந் உ.

தலைமை எழுத்துகாறன்.

---

## LAND SALES.

### காணி விற்பனவுகள்.

**No. 790, N. P.**—1915 ம் ஆண்டு புரட்டாதிமாதம் 9 ந் திகதி, 12 மணியளவில் தன் ஆபிசில், வட மாகாணத்து கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப் பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, பின்னுற் காணப்படும் பொருத்தனைகளின் பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது தீர்துவிடப்படும் அல்லது வேறுமாதிரியாக விற்கப்படும். 29 காணித்துண்டுகள், வடமாகாணத்து கரைச்சிப்பகுதியிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் 4,242. குறிச்சி—இரணைமடு.

உரித்தாளி—அரசாட்சி. விபரம்—காடு.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | | விசாலம் ஏ. | றூ. | ப. | | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1883 | முதிரங்காடு | .. | 8 | 1 | 15 | .. | 30 |
| 1882 | ஷை | .. | 19 | 3 | 39 | .. | 30 |
| 1881 | ஷை | .. | 20 | 0 | 3 | .. | 30 |
| 1880 | ஷை | .. | 19 | 3 | 38 | .. | 30 |
| 1879 | ஷை | .. | 19 | 3 | 38 | .. | 30 |
| 1884 | ஷை | .. | 29 | 3 | 11 | .. | 30 |
| 1885 | ஷை | .. | 19 | 3 | 38 | .. | 30 |
| 1886 | ஷை | .. | 20 | 0 | 0 | .. | 30 |
| 1887 | ஷை | .. | 19 | 2 | 16 | .. | 30 |
| 1870 | ஷை | .. | 23 | 0 | 2 | .. | 30 |
| 1871 | ஷை | .. | 20 | 0 | 0 | .. | 30 |
| 1872 | ஷை | .. | 19 | 3 | 37 | .. | 30 |
| 1873 | ஷை | .. | 20 | 0 | 0 | .. | 30 |
| 1874 | ஷை | .. | 19 | 2 | 4 | .. | 30 |
| 1869 | மகிழங்காடு | .. | 25 | 0 | 7 | .. | 30 |
| 1868 | ஷை | .. | 20 | 0 | 0 | .. | 30 |
| 1867 | ஷை | .. | 20 | 0 | 0 | .. | 30 |
| 1866 | ஷை | .. | 20 | 0 | 2 | .. | 30 |
| 1865 | ஷை | .. | 20 | 0 | 6 | .. | 30 |
| 1864 | ஷை | .. | 19 | 1 | 34 | .. | 30 |
| 1863 | மகிழங்காடு | .. | 19 | 1 | 25 | .. | 30 |
| 1891 | ஷை | .. | 22 | 0 | 18 | .. | 30 |
| 1875 | முதிரங்காடு | .. | 19 | 1 | 19 | .. | 30 |
| 1876 | ஷை | .. | 18 | 2 | 38 | .. | 30 |
| 1890 | ஷை | .. | 11 | 3 | 25 | .. | 30 |
| 1878 | ஷை | .. | 19 | 1 | 14 | .. | 30 |
| 1877 | ஷை | .. | 19 | 3 | 20 | .. | 30 |
| 1889 | ஷை | .. | 22 | 3 | 23 | .. | 30 |
| 1888 | ஷை | .. | 18 | 2 | 22 | .. | 30 |

1. ஏக்கரொன்றுக்கு முப்பது ரூபாய் வீதம் மதிப்பு விலைக்குக் குறையாத உயர்ந்த கேள்விக்காரனுக்குக் காணி விற்கப்படும். அந்தக் காணியின் எல்லைகளைக் காண்பிப்பதற்காய் இப்போ நடப்பட்டிருக்கும் அல்லது இனிமேல் நடப்படும் எல்லைக் கற்கள் ஒவ்வொன்றுக்கும் 80 சத வீதம் அறவிடப்படும். அந்தப் பணத்தையும் காணி விலையுடன் சேர்த்துக் கொள்விலைப் பணமாகக் கவனிக்கப்படும்.

2. உயர்ந்த கேள்விக்காரன் கொள்வனவுகாரனென்று தெரிவித்தவுடன் கொள்விலைத் தொகையில் நாலிலொரு பங்குப் பணத்தை உடனே ஏசன்றுத்துரையிடம் கட்டி, இந்தக்கொந்தீசுப்பத்திரத்துக்கும் நிலத்துக்கு நீர்ப்பாய்ச்சும் விபரமடங்கிய பத்திரத்துக்கும் கையொப்பமிட்டாலன்றி அந்தக் கேள்வி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3. அதன்பின் கொள்வனவுகாரனைக் காணி ஆட்சியில் விடப்படும். ஒவ்வொரு வருஷமும் நாலிலொருபங்கு நிலத்தைத் திருத்தி நெற்செய்கைபண்ணவேண்டியவனுவான்.

4. யாதொரு மரத்தையும் காணியிலிருந்து வெளியே கொண்டுபோகக்கூடாது. விலைப்படக்கூடிய விறகில் காட்டேசன்றுக்குச் சம்மதமான சாதி விறகைத் துண்டுகளாய்த் தறித்துக் காணியில் போக்குவரவுக்கு வசதியான ஓர் பகுதியில் அடுக்கிவைக்கவேண்டியது. துண்டுகளின் நீளமெவ்

வளவு என்பதையும் அடுக்கும் விதத்தையும் காட்டு ஏசன்றுவிடம் முன்னரே யறிந்துகொள்ளவேண்டியது. கொள்வனவுகாரன் விறகு அடுக்கியிருக்கிறதாகக் காட்டு ஏசன்றுக்கு அறிவித்தால் அவர் முன்சொன்னமாதிரி அடுக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு யார் கனமுள்ள விறகுக் குவியலுக்கு 25 சத வீதம் விலைகொடுத்து விறகை ஏற்றுக்கொள்வார். விறகு அடுக்கும் காலத்திற்கும் ஏற்றுமதிசெய்யுங் காலத்திற்குமிடையில் விறகு பாரத்திற் குறைந்திருந்தால் அக்குறைவுக்குக் காட்டு ஏசன்று பணங்கொடுக்கமாட்டார். மிகுதியாயிருக்கும் மரந்தடியில் வேலிக்குத் தேள்வையான தடிகளை நீக்கி மிகுதியைக் காணியில் போட்டு எரித்துவிடவேண்டியது.

5. கொள்வனவுகாரன் கொள்விலைப் பணத்தில் மிகுதியை மூன்று சமபங்குகளாய்ப் பிரித்து வருஷமொரு கெடுவாக மூன்று வருஷத்தில் தீர்த்துவிடவேண்டியது. இந்த மூன்று பங்கில் முதற்பங்கு விற்பனவுத் திகதியிலிருந்து ஒரு வருஷ முடிவிற் கொடுபடவேண்டியது.

6. மேற்சொல்லிய விதமாகப் பணத்தைச் சரியான காலத்தில் கட்டத் தவறினால் அல்லது மேற்சொல்லிய கொந்திசுகளின்படி நடக்கத் தவறினால், விற்பனவு அளிந்ததாகக் கவனித்து கொடுபட்ட பணமாவது காணி திருத்திய செலவாவது அல்லது வேறெவ்வித செலவாவது திரும்பக் கொடாமலே காணியைத் திரும்பவும் எடுத்துக்கொள்ள அரசாட்சியாருக்கு உரித்துண்டு.

7. கொள்விலைப்பணம் முழுவதும் ஏசன்றரிடம் கொடுபட்டு மேற்சொல்லிய கொந்திசுகளெல்லாம் நிறைவேற்றிய பின், கொள்வனவுகாரன் தானும் தன்னுடைய உரிமைக்காரரும் சுயாதீனமாய் எப்பொழுதும் ஆண்டனுபவிக்கத் தக்கதாகவும் பொதுவாய்க் காணியாஸ்தியைப்பற்றித் தற்காலம் உண்டாயிருக்கும் அல்லது இனிமேல் உண்டுபண்ணப்படும் நியாயப்பிரமாணங்களுக்கமைவாகவும் இராசாங்க முத்திரையுடன் கொள்வனவுகாரனுக்கு ஒரு அறுதிச் சாதனங் கொடுபடும்.

8. கொள்வனவுகாரன் அல்லது உரிமைக்காரர் சாட்டுதல்காரர் காணியின் எல்லைகளை அளவுபடத்திற் காட்டியிருக்கிறபடி வேலி அல்லது வரம்பு அல்லது தூண்கள் நட்டு தெளிவாய் காட்டவேண்டியது. அப்படிச் செய்யத் தவறுங்காலம் கவுண்மேந்து ஏசன்று தாமே அதைச் செய்வித்து வருஞ் செலவை கொள்வனவுகாரன், அல்லது உரிமைக்காரர் சாட்டுதல்காரரிடம் அறவிட்டுக்கொள்வார்.

9. இந்தக் காணியின் விபரத்தில் அல்லது அளப்பனவில் பின்னுக்கு ஏதாவது பிழை கண்டால், அதனிமித்தம் ஏதாவது நட்டம் அல்லது கொள்விலைப் பணத்தில் ஒரு பகுதியைக் கேட்கக் கொள்வனவுகாரனுக்கு உரித்தில்லை.

10. காணியிலே அரசாட்சியாரால் அமைக்கப்பட்ட எல்லைக் கற்கள் அல்லது வேறு அளப்பனவு அடையாளங்கள் அளிக்கப்பட்டு அல்லது அப்புறப்படுத்தப்பட்டிருந்தால், கொள்வனவுகாரன் அதற்காக ஒரு குற்றங் கொடுக்கவும் அப்பொருளைத் திருப்பி அமைக்கிறதற்காக வேண்டிய செலவுங் கொடுக்கவேண்டியவனாவான்.

இரணைமடுக்குளத்தால் நீர்பாய்ச்சக்கூடிய நிலத்துக்கு நீர்பாய்ச்சுதற்குரிய ஒழுங்குகளின் விபரம்.

1. இந்த நிலத்துக்கு இரணைமடுக்குளக் கட்டுவேலை முடிந்தவுடன் நீர்பாய்ச்சலாம். ஆனால் நீர்பாய்ச்சித் தருவோமென்று அரசாட்சியார் பொறுப்பு ஏற்கமாட்டார்கள்.

2. குளத்தால் நீர்பாய்ச்சக்கூடிய நிலத்தை அவ்வவ்விடத்திலுள்ள வசதிக்குத் தகுந்தபடி 200 ஏக்கர் தொடக்கம் 500 ஏக்கர் வரையில் துண்டுகளாய்ப் பிரிக்கப்படும். இத்துண்டுகளொவ்வொன்றிலுமுள்ள நிலச் சொந்தக்காரருக்குத் தங்கள் காரியங்களை ஒருமித்து அரசாட்சியாருடன் பார்க்கத்தக்க விதமான தத்துவங் கொடுக்கப்படும்.

3. நீர்ப்பாய்ச்சல் வரிகளைக் காலத்துக்குக்காலம் நியமிக்கவும் ஒவ்வொரு துண்டிலுமுள்ள நிலச்சொந்தக்காரருக்கு அந்த வரி வீதப்படி நீர் கொடுக்கவும் அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள். ஒவ்வொரு துண்டிலுமுள்ள நிலச் சொந்தக்காரர் அரசாட்சியார் நியமிக்கிற வரி கொடுத்து நீர்பாய்ச்ச விருப்பமோ விருப்பமில்லையோவென்று தாங்கள் ஒருமித்து முடிவுபண்ணிக்கொள்ளலாம்.

4. காணிக்காரர் தங்கள் நிலத்துக்கு நீர்ப்பாய்ச்ச விருப்பமோ விருப்பமில்லையோவென்று ஒருமித்து முடிவுபண்ணவும், அப்படிப் பண்ணிய முடிவு ஞாயப்பிரமாண வழியாய்ப் பெலப்புள்ளிருக்கவும் சீக்கிரத்தில் ஒரு சட்டளைச்சட்டம் உண்டுபண்ணப்படும்.

5. பொதுவாய், நீர்பாய்ச்சல் வரிகளை ஐந்து வருடத்திற் கொருமுறை நியமிக்கவும் ஒரு துண்டிலுள்ள காணிக்காரருக்கும் அரசாட்சியாருக்குமிடையே நீர்பாய்ச்சவும் வரி கொடுக்கவும் ஏற்படுத்தப்படும் பொருத்தனைகள் ஒவ்வொரு காணிக்காரனையும் ஐந்து வருடத்திற்குக் கட்டுப்படுத்தவும் எண்ணியிருக்கிறார்கள்.

6. குளத்தால் நீர்பாய்ச்சத்தக்க திகதி தொடக்கம் முதல் ஐந்து வருடத்திற்கு நீர்ப்பாய்ச்சல் வரி பின்வரும் வீதம் நியமிக்கப்படும். முதல் வருடத்திற்கு வரி அறவிடாமல் நீர் கொடுக்கப்படும். அடுத்த நாலு வருடங்களுக்கும் பின்னுற் காணப்படும் வீதம் வரிகள் அறவிடப்படும்.

வாடைக்காற்றுக் காலபோகம்.

கார்த்திகை முதல் திகதி தொடக்கம் பங்குனி பதினைந்தாந் திகதிக்கிடையில் விளைவுக்கு நீர் தேவையாகவிருந்தால் ஏக்கரொன்றுக்கு ரூபாய் 2 அறவிடப்படும்.

சோழகக்காற்றுக் காலபோகம்.

பங்குனி பதினைந்துக்கும் கார்த்திகை முதல் திகதிக்குமிடையில் விளைவுக்கு நீர் தேவையாகவிருந்தால் ஏக்கரொன்றுக்கு ரூபாய் 4 அறவிடப்படும்.

இரண்டாம் போகத்தில் போகம் முழுதும் நீர்பாய்ச்சினுலுஞ்சரி அல்லது குறைந்த காலத்துக்கு நீர் பாய்ச்சினுலுஞ்சரி போகம் முழுவதுக்கும் உள்ள வரியைக் கொடுக்கவேண்டும். ஒவ்வொரு காணிக்காரனிடமும் செய்கைபண்ணிய நிலத்தில் மாத்திரமல்ல அவனுடைய முழு நிலத்திலும் வரி அறவிடப்படும்.

ஒவ்வொரு போகத்திலும் பயிர் விளைவித்தால் மேற்சொல்லிய இரண்டு வரிகளும் அறவிடப்படும். அதாவது ஏக்கர் ஒன்றுக்கு ரூபா 6.

7. காணிக் கொள்விலைப் பணம் நாலு வருட ஒடுக்காகக் கட்டுகிறதானல் நீர்பாய்ச்சல் வரி பின்வருமாறு அறவிடப்படும்:—

விற்பனவு நடக்கும் வருடத்தில் தை தொடக்கம் மார்கழி முடிய வரி அறவிடாமல் நீர்கொடுபடும்.

இரண்டாவது வருடத்தில் தை தொடக்கம் மார்கழி முடிய நிலத்தில் அரைப்பங்கில் வரி அறவிடப்படும்.

மூன்றாவது வருடத்தில் தை தொடக்கம் மார்கழி முடிய முக்காற் பங்கு நிலத்திற்கு வரி அறவிடப்படும்.

நாலாவது வருடத்தில் முழு நிலத்திற்கும் வரி அறவிடப்படும்.

முதல் வருடந்தவிர மற்றைய ஒவ்வொரு வருடத்திற்கும் வீதம் மேற்சொல்லிய மூன்றும் பிரிவின்படி அவ்வக்காலத்தில் நியமிக்கப்படும் வீதமே நடைபெறும்.

8. காணியை ஒரே முறையில் முழுப்பணமுங் கொடுத்து வேண்டுகிறதானல் விற்பனவு நடக்கும் வருடத்தில் தை தொடக்கம் மார்கழி முடிய வரி அறவிடாமல் நீர் கொடுபடும். அப்பால் மேற்காட்டிய மூன்றும் பிரிவின் பிரகாரம் அவ்வக்காலத்தில் நியமிக்கப்படும் வரி முழுக் காணிக்கும் அறவிடப்படும்.

9. ஒவ்வொரு துண்டிலும் அதி உயர்ந்த பகுதிக்கு நீர் பாய்ச்சக்கூடிய பெருவாய்க்கால்கள் அரசாட்சியாரால் ஒழுங்குபண்ணப்படும். காணிக்காரர் தங்கள் வயல்களுக்கு நீர் பாய்ச்சத்தக்க சிறு வாய்க்கால்களைத் தாங்களே வெட்டிக்கொள்ள வேண்டியது. இச்சிறு வாய்க்கால்கள் செலவுள்ளவையல்ல.

கவனிப்பு.—பின்வருங் குறிப்புரைகளைத் தெளிவாய் விளங்கிக்கொள்ளவேண்டியது :—

1. மேற்காட்டிய விபரங்கள் அரசாட்சியார் நிறைவேற்ற எண்ணியிருக்கும் ஒழுங்குகளை அறிவிப்பதல்லாது அரசாட்சியாரைக் கட்டுப்படுத்தாது.

2. இந்த ஒழுங்குகள் நிறைவேற்றப்பட்டால் எந்தத் துண்டிலுமுள்ள காணிக்காரரில் குறைந்த பகுதியார் மூன்றும் பிரிவின் பிரகாரம் கூடிய பகுதியாருடைய எண்ணத்தின்படி கட்டுப்படுவார்கள்.

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,
கொலோனியல் சக்கிறத்தார்.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1915 ம் வருஷம் ஆடிமீ 20 ந் உ.

**No. 1,410, E. P.**—1915 ம் ஆண்டு புரட்டாதிமாசம் 7 ந் திகதி, செவ்வாய்க்கிழமை, பிற்பகல் ஒன்றரை மணிக்கு, கீழ் மாகாணத்து கவற்ணமேந்து ஏசென்றவர்கள் மட்டக்கழப்புக் கச்சேரியிலிருந்து இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்பனவு அல்லது உருத்துச்சோந்தைப்பிரகாரம் தீர்வை அல்லது வேறே விதமாகக் கடவைப்படுத்தல் செய்வார். கீழ் மாகாணத்து மட்டக்கழப்பு டிஸ்திறிக்கின் அக்கரைப்பற்றிலுள்ள இருபத்தொரு காணித்துண்டுகள்.

*பிளான் இலக்கம் 4,343. குறிச்சி—கருங்கொட்டித்தீவு. உருத்தாளி—முடிக்குரியது.*

| காணியின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம், ஏ. றூ. ப. | கண்டத்தின் தரிப்பு விலை ரூ. |
|---|---|---|---|---|---|
| 867 | வேலானைக்குழத்து ஆலையடிப்பூமி | பொ. கொ. அகமதுலெவ்வைப் போடி .. .. | திறந்த வேளாண்மைப்பூமி | 3 3 29 .. | 79 |
| 868 | ஷை .. | — .. | ஷை (வழிக்காக விடப்பட்டது) .. | 0 1 14 .. | — |
| 869 | ஷை .. | — .. | திறந்த வேளாண்மைப்பூமி (ஏரூட்டுக்காக விடப்பட்டது) .. | 0 1 20 .. | — |

*பிளான் இலக்கம் 4,678. குறிச்சி—தம்பட்டை. உரித்தாளி—முடிக்குரியது.*

| காணியின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம், ஏ. றூ. ப. | கண்டத்தின் தரிப்பு விலை ரூ. |
|---|---|---|---|---|---|
| 2710 | செம்மம்பூலந்திக்காட்டுப் பூமி .. | — .. | காடு (வழிக்காக விடப்பட்டது) .. | 0 1 31 .. | — |
| 2711 | ஷை .. | ஏ. ஈ. வேட்டுரை .. | தென்னைக்கேற்ற காடு .. | 33 2 19 .. | 673 |
| 2712 | தம்பட்டைப்பூமி .. | இளையாப்போடி வேலன் கூட்டிப்பிடித்தது | வேளாண்மைக்கேற்ற வெட்டைப்பூமி .. | 0 3 36 .. | 20 |
| 2713 | தம்பட்டைவழவு .. | இராமலிங்கம் கணபதி குடியிருந்தது .. | குடியிருக்கத்தக்க வழவு .. | 0 3 16 .. | 17 |
| 2714 | தம்பட்டைவெழி .. | ஐ. சடையப்புக் குருக்களும் மறுபேரும் செய்கைபண்ணியது | வேளாண்மைப்பூமி .. | 0 0 11 .. | 2 |
| 2715 | செம்மம்புலையடிக் காட்டுப் பூமி .. | பொதுவிற்பனவு .. | தென்னைக்கேற்ற காடு .. | 12 0 28 .. | 262 |

*பிளான் இலக்கம் 4,531. குறிச்சி—தம்பட்டை. உரித்தாளி—முடிக்குரியது.*

| காணியின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம், ஏ. றூ. ப. | கண்டத்தின் தரிப்பு விலை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1750 | தம்மட்டைப்பூமி .. | பொதுவிற்பனவு .. | தென்னைக்கேற்ற காடு .. | 9 3 5 .. | 147 |

*பிளான் இலக்கம் 4,680. குறிச்சி—திருக்கோவில் காஞ்சூரங்குடா. உரித்தாளி—முடிக்குரியது.*

| காணியின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம், ஏ. றூ. ப. | கண்டத்தின் தரிப்பு விலை ரூ. |
|---|---|---|---|---|---|
| 2725 | நாவலடி முன்மாரி .. | கா. கதிரமலைப்பரிகாரி .. | வேளாண்மைப்பூமி .. | 2 2 35 .. | 41 |
| 2726 | ஷை .. | பொதுவிற்பனவு .. | ஷை .. | 3 0 22 .. | 50 |

*பிளான் இலக்கம் 4,508. குறிச்சி—கோளாவில். உரித்தாளி—முடிக்குரியது.*

| காணியின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம், ஏ. றூ. ப. | கண்டத்தின் தரிப்பு விலை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1644 | தேவனுவெளிப்பூமி .. | பொதுவிற்பனவு .. | வேளாண்மைப்பூமி .. | 2 0 17 .. | 32 |
| 1645 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 3 12 .. | 13[illegible] |

*பிளான் இலக்கம் 4,356. குறிச்சி—தம்பிலுவில். உருத்தாளி—முடிக்குரியது.*

| காணியின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம், ஏ. றூ. ப. | கண்டத்தின் தரிப்பு விலை ரூ. |
|---|---|---|---|---|---|
| 905 | கந்தக்குடாப்பூமி அல்லது கரச்சைப்பூமி .. | பொதுவிற்பனவு .. | திறந்த வேளாண்மைப்பூமி | 1 2 3 .. | 23 |

*பிளான் இலக்கம் 4,679. குறிச்சி—தம்பிலுவில். உருத்தாளி—முடிக்குரியது.*

| காணியின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம், ஏ. றூ. ப. | கண்டத்தின் தரிப்பு விலை ரூ. |
|---|---|---|---|---|---|
| 2718 | முனைக்காட்டுப்பூமி .. | வீரப்பன்செட்டி குமரப்பெருமாள் .. .. | வேளாண்மைப்பூமி .. | 0 0 14 .. | 3 |
| 2719 | ஷை .. | ஷை .. | வேளாண்மைக்கேற்ற காடு | 3 0 13 .. | 78 |
| 2722 | ஷை .. | பொதுவிற்பனவு .. | ஷை .. | 0 3 15 .. | 22 |

*பிளான் இலக்கம் 4,406. குறிச்சி—ஒலியன்யாக்கை. உருத்தாளி—முடிக்குரியது*

| காணியின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம், ஏ. றூ. ப. | கண்டத்தின் தரிப்பு விலை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1136 | தண்ணீப்பந்தல் முன்மாரி | பொதுவிற்பனவு .. | வேளாண்மைப்பூமி .. | 16 2 32 .. | 334 |

*பிளான் இலக்கம் 4,420. குறிச்சி—பாடாகோடை. உருத்தாளி—முடிக்குரியது.*

| காணியின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம், ஏ. றூ. ப. | கண்டத்தின் தரிப்பு விலை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1217 | சாங்குலையடிப்பூமி .. | பொதுவிற்பனவு .. | வெட்டைப்பூமி .. | 1 0 20 .. | 17 |

*பிளான் இலக்கம் 4,517. குறிச்சி—ஒலுவில். உருத்தாளி—முடிக்குரியது.*

| காணியின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம், ஏ. றூ. ப. | கண்டத்தின் தரிப்பு விலை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1684 | கடுகுப்பூமி .. | பொதுவிற்பனவு .. | தென்னமரவழவு .. | 0 1 33 .. | 92 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விபரங்களை மட்டக்கழப்பு அரசாட்சி ஏசென்றுத்துரையவர்களிடமும் அவைகளின் படங்களை நில அளவைக்காரிய அத்திஷ்ரிடமும் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1915 ம் ஷு ஆடிமீ 16 ந் உ.

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,
கொலோனியல் சக்கிறத்தார்.

---

**No. 1,411, E. P.**—1915 ம் ஆண்டு புரட்டாதிமாதம் 21 ந் திகதி, செவ்வாய்க்கிழமை, பிற்பகல் ஒன்றரை மணிக்கு, கீழ் மாகாணத்து கவற்ணமேந்து ஏசென்றவர்கள் மட்டக்கழப்புக் கச்சேரியிலிருந்து இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்பனவு அல்லது உருத்துச்சோந்தைப் பிரகாரம் தீர்வை அல்லது வேறே விதமாகக் கடவைப்படுத்தல் செய்வார். கீழ் மாகாணத்து மட்டக்கழப்பு டிஸ்திறிக்கின் சம்மாந்துறைப் பற்றிலுள்ள முப்பத்துமூன்று காணித்துண்டுகள்.

*பிளான் இலக்கம் 4,323. குறிச்சி—சொறிக்கல்முனை. உரித்தாளி—முடிக்குரியது.*

*காணியின் பெயர்—நாவல்காடு.*

| காணியின் இல. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம், ஏ. றூ. ப. | கண்டத்தின் தரிப்பு விலை ரூ. |
|---|---|---|---|---|
| 815 | பொதுவிற்பனவு (மரியான் தோமாஸ் என்பவரால் கேட்கப்பட்டது) .. | சேனைக்கேற்ற காடு .. .. | 2 0 26 .. | 33 |

*காணியின் பெயர்—தீவுக்காடு.*

| காணியின் இல. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம், ஏ. றூ. ப. | கண்டத்தின் தரிப்பு விலை ரூ. |
|---|---|---|---|---|
| 817 | பொதுவிற்பனவு (மனுவல் சந்தியாவென்பவரால் கேட்கப்பட்டது) .. | வேளாண்மைக்கேற்ற காடு .. | 3 2 7 .. | 54 |

| காணியின் இல. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | கண்டத் விசாலம், ஏ. | றூ. | ப. | தின் தரிப்பு விலை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 818 | சஞ்சுத்தம்பி பொ. த. ஜோன்பிள்ளை .. | செய்கைபண்ணியபூமி எஸ்தாக்கி கைம்பெண் மதலேனுவினுடைய பேதுருப்பிள்ளை எலேனுவினுடைய செய்கைபண்ணப்பட்டது .. | 0 | 1 | 15 | .. 6 |
| 821 | பொதுவிற்பனவு வ. சூசைப்பிள்ளையால் கேட்கப்பட்டது .. | சேனைக்கேற்ற காடு .. .. | 3 | 2 | 15 | .. 54 |

பிளான் இலக்கம் 4,693. குறிச்சி—சொறிக்கல்முனை. உரித்தாளி—முடிக்குரியது.

காணியின் பெயர்—குளத்துப்பூமி அல்லது மயில்குளம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2817 | மரியான் பிலிப்பு .. | வேளாண்மைக்கேற்ற வெட்டைப்பூமி .. | 1 | 3 | 33 | .. 34 |

காணியின் பெயர்—மயில்குளம் வயல்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2818 | ச. பி. குருசு கூட்டிப்பிடித்தது .. | வேளாண்மைப்பூமி .. .. | 0 | 0 | 32 | .. 4 |
| 2819 | ஷை .. | ஷை .. .. | 0 | 2 | 29 | .. 12 |
| 2820 | அந்தோனி நீககிளான் (கூட்டிப்பிடித்தது) | ஷை .. .. | 0 | 0 | 6 | .. 1 |

பிளான் இலக்கம் 4,689. குறிச்சி—வீரமுனை. உரித்தாளி—முடிக்குரியது. காணியின் பெயர்—இழல்கண்டம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2787 | மா. வ. சிந்தாத்திரைப்போடி வன்னிமை .. | வேளாண்மைப்பூமி .. .. | 1 | 2 | 27 | .. 51 |

பிளான் இலக்கம் 4,695. குறிச்சி—வீரமுனை. உரித்தாளி—முடிக்குரியது. காணியின்பெயர்—வத்தாலைக்குளத்துப்பூமி.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2824 | மதலிவாய்ப்போடி ஈசுப்புலெவ்வை .. | வேளாண்மைக்கேற்ற காடு .. | 14 | 1 | 7 | .. 286 |

காணியின் பெயர்—காயான்தோற்றம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2825 | ஷை .. | வேளாண்மைக்கேற்ற காடு .. | 16 | 3 | 10 | .. 337 |

காணியின் பெயர்—வத்தாலைக்குளத்து வயல்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2826 | ம. ஈசுப்புலெவ்வை கூட்டிப்பிடித்தது .. | வேளாண்மைப்பூமி .. .. | 2 | 0 | 33 | .. 45 |

பிளான் இலக்கம் 4,696. குறிச்சி—வீரமுனை. உரித்தாளி—முடிக்குரியது. காணியின் பெயர்—புளியடிக்கண்டம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2827 | பொ. த. அசனார்லெவ்வை .. | வேளாண்மைக்கேற்ற பணிந்தகாடும் வெட்டைப்பூமியும் .. .. | 3 | 0 | 0 | .. 53 |
| 2828 | பொதுவிற்பனவு .. | ஷை .. .. | 2 | 0 | 14 | .. 34 |

பிளான் இலக்கம் 4,687. குறிச்சி—சம்மாந்துறை. உரித்தாளி—முடிக்குரியது. காணியின் பெயர்—சுளையன்சேனை.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2773 | அகமதுலெவ்வை முகமதுத்தம்பி .. | வளவு, கேள்விக்காரனால் கூட்டிப்பிடிக்கப்பட்டது .. .. | 3 | 2 | 29 | .. 63 |
| 2774 | அ. ம. சின்னக்கலந்தர் .. | ஷை .. .. | 2 | 1 | 28 | .. 42 |
| 2775 | பொதுவிற்பனவு .. | வேளாண்மைக்கேற்ற காடு .. | 0 | 2 | 33 | .. 13 |

காணியின் பெயர்—நெல்லிச்சேனை.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2776 | ஈயாக்குட்டிப்போடி மாரியன்கந்தர் .. | கண்டத்திலொருபகுதி வேளாண்மைச் செய்கைபண்ணப்பட்டது .. | 0 | 1 | 37 | .. 9 |

காணியின் பெயர்—சுளையன்சேனை.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2777 | — .. | வளவுக்கேற்ற காடு (ரோட்டுக்காக விடப்பட்டது) .. .. | 0 | 1 | 1 | .. — |

பிளான் இலக்கம் 4,685. குறிச்சி—சடையன்தளவாய். உரித்தாளி—முடிக்குரியது.

காணியின் பெயர்—கூர்கண்டம் அல்லது சாகடிப்பூமி.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2766 | ஏ. டி. சில்வா .. | தென்னைக்கேற்ற பறட்டைக்காடு .. | 1 | 3 | 28 | .. 39 |
| 2767 | பொதுவிற்பனவு .. | ஷை .. .. | 1 | 0 | 33 | .. 25 |

காணியின் பெயர்—கட்டடிப்பூமி அல்லது வாழைபோட்ட வட்டை.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2768 | சின்னத்தம்பி வெத்திவேலு .. | தென்னைக்கேற்ற பறட்டைக்காடு .. | 1 | 3 | 34 | .. 40 |

பிளான் இலக்கம் 4,396. குறிச்சி—வீரகொடை. உரித்தாளி—முடிக்குரியது. காணியின் பெயர்—நாவல்சோலைப்பூமி.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1080 | பொதுவிற்பனவு (ஈ. அ. முகமதுலெவ்வையும் வேறிரண்டுபேரும் கேட்டது) | வெட்டைப்பூமி .. .. | 2 | 2 | 39 | .. 42 |
| 1083 | ஷை .. | ஷை .. .. | 0 | 3 | 11 | .. 13 |

காணியின் பெயர்—நாவல்சோலைப்பூமி அல்லது நாவலடித்திடல்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1084 | பொதுவிற்பனவு (கே. பரசிராமனும் வேறிரண்டு பேராலும் கேட்கப்பட்டது) .. | ஷை .. .. | 3 | 3 | 36 | .. 60 |

பிளான் இலக்கம் 4,713. குறிச்சி—அன்னமலை. உரித்தாளி—முடிக்குரியது. காணியின் பெயர்—அல்லியடிமுனை.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2893 | வே. கண்ணப்பன் கூட்டிப்பிடித்தது .. | வேளாண்மைப்பூமி .. .. | 0 | 2 | 3 | .. 11 |
| 2894 | அ. ஆறுமுகம் கூட்டிப்பிடித்தது .. | தென்னமரவளவு .. .. | 0 | 3 | 17 | .. 75 |
| 2895 | ஷை .. | வழவு .. .. | 0 | 1 | 37 | .. 8 |

காணியின் பெயர்—கரைக்குடாப்பூமி.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2896 | பொதுவிற்பனவு .. | தென்னைக்கேற்ற பணிந்தகாடு .. | 0 | 2 | 38 | .. 12 |
| 2897 | வேலாயுதர் கந்தப்பன் கூட்டிப்பிடித்தது | தென்னைமர வளவு .. .. | 1 | 3 | 2 | .. 125 |
| 2898 | ஷை .. | ஷை .. .. | 0 | 1 | 23 | .. 150 |
| 2899 | நா. வேலாயுதன் பரிகாரி .. | தென்னைக்கேற்ற காடு .. .. | 0 | 3 | 24 | .. 15 |
| 2900 | ஷை .. | வேளாண்மைப்பூமி .. .. | 2 | 1 | 17 | .. 40 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விபரங்களை மட்டுச்கழப்பு அரசாட்சி ஏசன்றுத்துரையவர்களிடமும் அவைகளின் படங்களை நில அளவைக்காரிய அத்தியக்ஷரிடமுங் கேட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபீசில்,
கொழும்பில், 1915 ம் ஸ்ரீ ஜூலைமீ 27 ந் உ.

ஆர். ஈ. ஸ்றற்ப்ஸ்,
கொலோனியல் சக்கிறத்தார்.

# LAND ACQUISITION NOTICES.

அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Minuwangoda, Colombo District.]

1876 ம் ஆு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மினுவாங்கொடையில் ஓர் பள்ளிக்கூடத்திற்கும் பிரசித்த மார்க்கட்டுக்கும் ஓர் புதிய குறுக்குத் தெருவுக்கும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதம படத்து இலக்கம் 15,993. குறிச்சி—மினுவாங்கொடை. காணியின் பெயர்—ககற்றகாவத்தை.

| துண்டு. | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|
| 1 | தென்னந்தோட்டம் ஏறக்குறைய ஒரு தென்னமரமுள்ளது (பெரிசு) .. .. .. | ஓ. டன் சாள்சு பொன்செக்கா .. | 0 0 2·62 |
| 2 | தென்னந்தோட்டம், ஏறக்குறைய 1 யம்போலே, 21 தென்னமரங்கள், 1 பலாமரம், 1 புளிமரம், 1 வதுளேமரம், 6 கமுகமரம், 2 மாமரங்களும் .. .. | கலமுள்ளேயிலே இருக்கும் வி. டன் யகோனிஸ் .. .. | 0 1 13·75 |
| | காணியின் பெயர்—அம்வகாவத்தை. | | |
| 3 | தென்னந்தோட்டம், ஏறக்குறைய 34 தென்னமரங்கள் (வயதுபோன), 54 தென்னம்பிள்ளை, 1 பலாமரம், 15 கமுகமரங்களும், 1 மாமரமும், 2 வில்லவத்திரிமரமும், 1 இலிமிச்சமரமும் .. .. .. | சி. ஐ. டி. அவேகுணவாடின வெஸ்லி கொலிஜ், கொழும்பு .. | 0 2 14·25 |
| | காணியின் பெயர்—ககற்றகாவத்தை. | | |
| 4 | தென்னந்தோட்டம், ஏறக்குறைய 10 தென்னம்பிள்ளைகளும், 6 தென்னமரங்களும் (வயதுபோன), 2 கமுகமரங்களும், 1 கொன்னமரமும், கொஞ்ச கமுகம்பிள்ளையும் .. | ஓ. டன் சாள்சு பொன்சேக்கா .. | 0 0 13·50 |
| 5 | தென்னந்தோட்டம் ஏறக்குறைய 1 தொம்வமரமும் 10 தென்னமரங்களும் (வயதுபோன), 2 கமுகமரங்களும், 1 மாமரமும் .. .. .. | கலகெதறையிலிருக்கும் வி. டன் யகோனிஸ் .. .. | 0 0 29 |
| | காணியின் பெயர்—அம்வகாவத்தை. | | |
| 6 | தென்னந்தோட்டம், ஏறக்குறைய 1 கமுகமரமும், 1 ஜம்போலமரமும், 1 பலாமரமும், 3 தென்னம்பிள்ளைகளும் | சி. ஐ. டி. அவேகுனவாடின வெஸ்லி கொலிஜ், கொழும்பு .. | 0 0 4·12 |
| | காணியின் பெயர்—கல்டறன்வத்தை. | | |
| 7 | தென்னந்தோட்டம், 4 வயதுபோன தென்னமரங்கள், 4 தென்னம்பிள்ளைகள் .. .. | பெலியகொடையின் பேதுறு டையசின் உரித்தாளிகளுக்கு .. | 0 0 10·37 |
| | காணியின் பெயர்—கலகாவத்தை. | | |
| 8 | தென்னந்தோட்டம், ஏறக்குறைய 5 தென்னம்பிள்ளைகள் | யெ. டன் சிமான் அப்புகாமி .. | 0 0 5·37 |
| | காணியின் பெயர்—கல்டறன்வத்தை. | | |
| 9 | தென்னந்தோட்டம், ஏறக்குறைய 12 வயதுபோன தென்னமரங்கள், 5 தென்னம்பிள்ளைகள், 1 பலாமரம் .. | பெலியகொடையின் பேதுறு டையசின் உரித்தாளிகளுக்கு .. | 0 0 28 |
| 10 | தென்னந்தோட்டம், ஏறக்குறைய 68 தென்னமரங்கள் (வயதுபோன), 2 கல்மில்லமரங்கள், 1 மாமரம், 1 பலாமரம், 23 தென்னம்பிள்ளைகள், 1 பழய கிணறு, 1 ஓலையால் வேய்ந்த வீடு, கொஞ்ச வாழைமரங்களும் .. | ஷை .. | 0 3 21·62 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1915 ம் ஆு ஆவணிமாசம் 31 ந் தேதியிலன்று மத்தியானம் 12 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1915 ம் ஆு ஆடிமீ 26 ந் உ.

ஈ. றுதிரிகு,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டுக்காக.

---

[Hiripitiya, Colombo District.]

1876 ம் ஆு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வியான்கொடை டேசனை திரும்பி கட்டுகிறதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதம படத்து இலக்கம் 15,997. குறிச்சி—கிறிப்பிற்றியா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | யம்வுகாவத்தை .. | செய்கைப்படுத்தாத நிலம் 2 வா மரம்உள்ளது .. | வெற்றசிங்கபதகே கெவாவும் மறுபேரும் .. | 0 0 10·37 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1915 ம் ஆு புரட்டாசிமாசம் 2 ந் தேதியிலன்று மத்தியானம் 12 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1915 ம் ஆு ஆடிமீ 24 ந் உ.

ஈ. றுதிரிகு,
மேல் மாகாண அரசாட்சி ஏசண்டுக்காக.

[Avisawella, Colombo District.]

1876 ம் ஆு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அவிஸ்சாவெலையில் ஓர் சக்கூசு கட்டுகிறதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 15,979. குறிச்சி—அவிஸ்சாவெலை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | பறணபரற .. | வெறுநிலம் பழய தெருவின் பகுதி .. | அரசாட்சி .. .. | 0 0 4·09 |
| 2 | தானயம்வத்தை | வெறுநிலம், ஆடுமாடுமாலையின் பகுதி .. | வி. எல். டிறிவேர்ங் அவர்களுக்கு .. | 0 0 6·09 |
| 3 | ஷை .. | ஷை .. | அரசாட்சி .. .. | 0 0 2·84 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1915 ம் ஆு ஆவணிமாசம் 27 ந் தேதியிலன்று மத்தியானம் 12 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது

கொழும்புக் கச்சேரி, ஈ. றுதிரிகு,
1915 ம் ஆு ஆடிமீ 24 ந் உ. மேல் மாகாண அரசாட்சி ஏசண்டுக்காக.

[Kospitiyuna, Colombo District.]

1876 ம் ஆு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பூகொடையில் ஓர் சந்தைக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

துண்டு அளவின் பிரதம படத்து இலக்கம் 3. குறிச்சி—கொஸ்பிற்றியான.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | சகற்ககாவத்தை .. | செய்கையற்ற ஊரவர்களின் தோட்டம் .. | பெற்று கொழும்பிலிருக்கும் பிலிப்சாகு .. | 0 0 0·25 |
| 2 | ஷை .. | ஊரவரின் தோட்டம், 24 வாழை மரங்கள், 1 வில்லவத்திரி மரம், 1 பழய கொக்கோ மரம், காய்கறி மரங்கள் | கொஸ்பிற்றியானையிலிருக்கும் வி. டன் சிமான் .. | 0 0 22·75 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆு-த துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச்சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1915 ம் ஆு புரட்டாதிமாசம் 2 ந் தேதியிலன்று மத்தியானம் 12 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி, ஈ. றுதிரிகு,
1915 ம் ஆு ஆடிமீ 24 ந் உ. மேல் மாகாண அரசாட்சி ஏசண்டுக்காக

[Within the Local Board Limits of Bandarawela.]

1876 ம் ஆு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வதுளை வண்டாறவலை றெயில் சரிக்கட்டுவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 1,817. குறிச்சி—வண்டாறவலை லோக்கல் வோட்டுக்குள் அடங்கிய.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப |
|---|---|---|---|---|
| 1 | மகவத்த .. | 50 வருஷம்சென்ற 1 பிலா மரமும், 10 வருஷம்சென்ற 2 கோப்பிசெடியுள்ள சயா தோட்டம் | வண்டாறவலையின் கிறேக் தோட்டத்திலிருக்கும் டபிள்யு. எய். விஜெயசேக்கிற .. | 0 0 13·31 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1915 ம் ஆு பிரட்டாசிமீ 30 ந் தேதியிலன்று பிற்பகல் 1 மணிக்கு வதுளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி, எவ். பார்ட்லெற்,
1915 ம் ஆு ஆடிமீ 22 ந் உ. ஊவா அரசாட்சி ஏசண்டு

[Tenders for Toll Rents, Puttalam District.]

"சிலாப டிஸ்திறிக்கின் 1915 ம் ஆண்டு ஐப்பசிமாதம் 1 ந் திகதி தொடக்கம் 1916 ம் ஆண்டு புரட்டாசிமாதம் 30 ந் திகதி முடிவாகும் 12 மாதங்களுக்கு ஆயக்குத்தகைகளை விலைக்கு வாங்கவென்று" மேலுறையி லெழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக் கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி அரசாட்சி ஏசன்றுத்துரையவர்களால் சிலாப கச்சேரியில் 1915 ம் ஆண்டு ஆவணிமாதம் 16 ந் திகதியாகிய திங்கட்கிழமை பகல் 1 மணிக்கு ஏற்றுக்கொள்ளப்படும் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இக்கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் தினமதில் கேள்விக்காரர்கள் வந்து சமுகமாயிருக்க வேண்டும்.

2. கேள்விக்காரர் இதன் பின்னால் சொல்லப்படும் ஆயக்குத்தகைகளை வெவ்வேறாய்க் கேள்விப்பத்திரங்கள் எழுதிக் கேட்கவேண்டும்.

3. தேசாதிபதியவர்களின் சம்மதிக்காக அனுப்ப உதவி அரசாட்சி ஏசன்றுதுரையவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திரங்களையுடைய கேள்விக்காரர் ஒவ்வொரு ஆயக்குத்தகைக்கும் கொள்விலையின் பத்திலொரு பங்கு பணம் உடனே கட்டவேண்டும். தேசாதிபதியவர்கள் அக்கேள்வியை ஏற்றுக்கொண்டால், அச்சம்மதியை

அறியக்கொடுத்த 30 நாளைக்குள்ளாக கொள்விலையின் சரியரவாசிககு ஒப்புக்கொள்ளப்பட்ட பிணை கொடுக்க வேண்டும், அல்லது கொள்விலையின் மூன்றிலொரு பங்கு பணத்தில் பிணைகட்டவேண்டும். பிணைக்காக உறுதிகள் கொடுக்கப்பட்டால் குத்தகை முடியுமட்டும் குத்தகையை வாங்கின தினத்தில் கட்டப்பட்ட பத்திலொரு பங்கு பணம் வைத்துக் கொள்ளப்படும்.

4. பிணைக்காகக் கட்டும் உறுதிகளைப் பரிசோதித்து ஒழுங்குபடுத்தவும் உறுதிகளைச் சோதித்து பிணையுறுதி யெழுதவும் முடிபுறத் தரணியின் செலவுகள் அனுகூலப்படும் கேள்விக்காரனால் கட்டப்படவேண்டும். மேலும் ஆஸ்திகளை மதிப்பிடுகிற செலவுகளையும், 1909 ம் ஆண்டு 22 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி' உறுதிகளின்பேரால் வரும் முத்திரைச் செலவுகளையும் அவரே கட்டவேண்டும்.

5. பிணைக்காகக் கொடுக்கப்படும் எல்லா உறுதிகளுடன் அவ்வுறுதிகளில் காண்கிற காணிகள் வேறொருவிதமாகவுஞ் சாட்டுதல்பண்ணப்பட்டதல்ல வென்று காணிப் பதிவுக்கார றெஜிஷ்டர் அவர்களிடம் பெற்றுக்கொண்ட அத்தாட்சிப் பத்திரமும் அனுப்பப்படவேண்டும். இவ் வத்தாட்சிப்பத்திரங்கள் பிணை கொடுக்கிறவருடைய செலவாலே பெற்றுக் கொள்ளவேண்டும்.

6. இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விளம்பரங்களைப் புத்தளம் உதவி அரசாட்சி ஏசன்றுதுரையவர்களிடம் வினவி அறிந்துகொள்ளலாம்.

ஆற்றுக் குத்தகை.

1. நாத்தாண்டி.
2. முன்னுத்திபிரிவு.

எஸ். எம். பி. வேந்தர்கோன்,
உதவி அரசாட்சி ஏசன்றுத்துரையவர்களுக்காக.

புத்தளம் கச்சேரி,
1915 ம் ஆண்டு ஆடி மீ 21 ந உ.

---

[Tenders for Toll Rents, Puttalam District.]

" புத்தளம் டிஸ்திறிக்கின் 1915 ம் ஆண்டு ஐப்பசி மீ 1 ந திகதி தொடக்கம் 1916 ம் ஆண்டு பிரட்டாசி மீ 30 ந திகதி முடிவாகும் 12 மாதங்களுக்கு ஆயக்குத்தகைகளை விலைக்கு வாங்க" வென்று மேலுறையி லெழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கை பண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏசண்டுத்துரையவர்களால் புத்தளம் கச்சேரியில் 1915 ம் ஆண்டு ஆவணி மீ 13 ந திகதியாகிய வெள்ளிக்கிழமை பகல் ஒரு மணிக்கு ஏற்றுக்கொள்ளப்படும் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இக்கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் தினமதில் கேள்விக்காரர்கள் வந்து சமுகமாயிருக்க வேண்டும், அல்லது அவர்களுக்குப் பதிலாக அவர்களின தத்துவம் பெற்றவர்களாவது தங்களுடைய கேள்விப்பத்திரங்கள் உண்மையானதென்று உதவி அரசாட்சி ஏசன்றுத்துரையவர்களுக்கு அத்தாட்சிபண்ணவேண்டும்.

2. கேள்விக்காறர் இதன்பின்னால் சொல்லப்படும் ஆயக்குத்தகைகளை வெவ்வேறாய் கேள்விப்பத்திரங்களெழுதிக் கேட்கவேண்டும்.

3. தேசாதிபதியவர்களின் சம்மதிக்காக அனுப்ப உதவி அரசாட்சி ஏசன்றுதுரையவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திரங்களையுடைய கேள்விக்காறர் ஒவ்வொரு ஆயக்குத்தகைக்கும் கொள்விலையின் பத்திலொரு பங்கு பணம் உடனே கட்டவேண்டும். தேசாதிபதியவர்களால் அக்கேள்வியை ஏற்றுக்கொண்டால், அச்சம்மதியை யறியக்கொடுத்த 30 நாளைக்குள்ளாக கொள்விலையின் சரியரவாசிக்கு ஒப்புகொள்ளப்பட்ட பிணைகொடுக்க வேண்டும், அல்லது கொள்விலையின் மூன்றிலொரு பங்கு பணத்தில் பிணைகட்ட வேண்டும். பிணைக்காக உறுதிகள் கொடுக்கப்பட்டால் குத்தகை முடியுமட்டும் குத்தகையை வாங்கின தினத்தில் கட்டப்பட்ட பத்திலொருபங்கு பணம் வைத்துக் கொள்ளப்படும்.

4. பிணைக்காக கட்டுமுறுதிகளைப் பரிசோதித்து ஒழுங்குபடுத்தவும் உறுதிகளைச் சோதித்து பிணையுறுதி யெழுதவும் முடிபுறத்தரணியின் செல்வுகள் அனுகூலப்படும் கேள்விக்காரனால் கட்டப்படவேண்டும். ஆஸ்திகளை மதிப்பிடுகிற செலவுகளையும், 1909 ம் ஆண்டு 22 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி உறுதிகளின்பேரால் வரும் முத்திரைச் செலவுகளையும் அவரே கட்டவேண்டும்.

5. பிணைக்காகக் கொடுக்கப்படும் எல்லா உறுதிகளுடன் அவ்வுறுதிகளில் காண்கிற காணிகள் வேறொருவிதமாகவுஞ் சாட்டுதல்பண்ணப்பட்டதல்ல வென்று காணிப்பதிவுகாரறிஜிஸ்டர் அவர்களிடம் பெற்றுக்கொண்ட அத்தாட்சிப்பத்திரமும் அனுப்பப்பட வேண்டும். இவ்வத்தாட்சிப் பத்திரங்கள் பிணைகொடுக்கிறவருடைய செலவில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

6. இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விளம்பரங்களைப் புத்தளம் உதவி யரசாட்சி யேசன்றுத்துரையவர்களிடம் வினவி யறிந்துகொள்ளலாம்.

ஆற்றுக்குத்தகை.

1. பாலாவி.

துறைக் குத்தகை.

2. ஏத்தாலை.
3. கல்பிட்டி—முகத்துவாரம்.

எஸ். எம். பி. வேந்தர்கோன்,
உதவி அரசாட்சி ஏசன்றுத்துரைக்காக.

புத்தளம் கச்சேரி,
1915 ம் ஆண்டு ஆடி மீ 21 ந உ.

---

## Notice under "The Excise Ordinance, No. 8 of 1912."

## 1912 ம் ஆண்டின் 8 ம் இலக்க கள்ளு சாராய கட்டளைச் சட்டத்தின்கீழ் அறிவித்தல்.

[Closing Foreign Liquor Tavern at Lunuwila, Chilaw District.]

1913 ம் ஆண்டு வைகாசி மீ 16 ந திகதி 6,562 ம் நொம்பர் கவண்மேந்து "கசற்" பத்திரிகையில் பிரசித்தம்பண்ணப்பட்ட 9 ம் தீர்வை வாங்கும் அறிவித்தலின் 4 ம் அத்தியாயம் 4 ம் அதிகாரத்தினுட்பிரிவின் முறைப்படிக்கு பொது அறிவித்தலுக்காக இத்தால் சொல்லப்படுகிறதென்னவானால் 1915 ம் ஆண்டு ஐப்பசி மீ 1 ந திகதி துவக்கம் 1916 ம் ஆண்டு புரட்டாதி மீ 30 ந தேதி வரைக்குமுள்ள குத்தகைகாலத்தில் பிறதேச மதுபானங்கள் கிலாஸ்கணக்கில் விற்கும்படி சிலாப டிஸ்திறிக்கில் லுனுவில்லை கிராமத்திலிருக்கும் மோசஸ் வாஸ்சின்பேரில் கொடுக்கப்பட்ட 11 ம் நொம்பர் லைசன் தவறணையை நிறுத்த நியமனம்பண்ணப்பட்டிருக்கின்றன.

வருகிற புரட்டாதிமாதம் 13 ந திகதி திங்கட்கிழமை புத்தளம் கச்சேரியில் இரண்டு மணி வரைக்கும் மேற்சொல்லிய பிறதேச மதுபானம் விற்கும் தவறணையை நிறுத்துதலைப்பற்றி உள்ள ஏதாவது விண்ணப்பங்கள் எழுத்துமூலத்திலேனும் அல்லது வாய்மூலத்திலேனும் ஏற்றுக் கொள்ளப்படும்.

(கையொப்பம்) சி. எச். கொலின்ஸ்,
அரசாட்சி உதவி ஏசண்டு.

புத்தளம் கச்சேரி,
1915 ம் ஆண்டு ஆடி மீ 24 ந உ.

---

[Closing Foreign Liquor Tavern at Mundal, Puttalam District.]

1913 ம் ஆண்டு வைகாசிமாதம் 16 ந திகதி 6,562 ம் நொம்பர் கவண்மேந்து "கசற்" பத்திரிகையில் பிரசித்தம் பண்ணப்பட்ட 9 ம் தீர்வைவாங்கும் அறிவித்தலின் 4 ம் அத்தியாயம் 4 ம் அதிகாரத்தினுட் பிரிவின் முறைப்படிக்கு பொது அறிவித்தலுக்காக இத்தால் சொல்லப்படுகிறதென்னவானால் 1915 ம் ஆண்டு ஐப்பசிமாதம் 1 ந திகதிதுவக்கம் 1916 ம் ஆண்டு புரட்டாதிமாதம் 30 ந திகதிவரைக்குமுள்ள குத்தகை காலத்தில் பிறதேச மதுபானங்கள் போத்தல் கணக்கில் விற்கும்படி புத்தள டிஸ்திறிக்கில் முந்தல்கிராமத்திலிருக்கும் கே. எஸ். யோசேப் பீரிசின்பேரில் கொடுக்கப்பட்ட 15 ம் நொம்பர் லைசன் தவறணையை நிறுத்த நியமனம் பண்ணப்பட்டிருக்கின்றன.

வருகிற புரட்டாதிமாதம் 13 ந திகதி திங்கட்கிழமை புத்தளம் கச்சேரியில் இரண்டு மணிவரைக்கும் மேற்சொல்லிய பிறதேச மதுபானம் விற்கும் தவறணையை நிறுத்துதலைப் பற்றி உள்ள ஏதாவது விண்ணப்பங்கள் எழுத்து மூலத்திலேனும் அல்லது வாய்மூலத்திலேனும் ஏறறுக்கொள்ளப்படும்.

(கையொப்பம்) சி. எச். கொலின்ஸ்,
அரசாட்சி உதவி ஏசண்டு.

புத்தளம் கச்சேரி,
1915 ம் ஆண்டு ஆடி மீ 26 ந உ.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.